பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

# மகிழ்மணிமாலை.

முத்துப்பேட்டை சங்கப்பிரசங்கியாகிய
அஷ்டாவதானி முஹிய்யிதீன் பக்கீர் புலவரவர்களின்
மாணாக்கரிலொருவராகிய நல்லமீரு சாகிபு
அவர்களின் தவப்புத்திரராகிய

ந. மு. முஹம்மது முஹிய்யதீன. புலவர்கள்

இயற்றியது.

---

சிங்கப்பூர்
ந. மு. அப்துல் ஹமீது அவர்களால் அச்சிடப்பட்ட
பிரதிக்கிணைக்கு,

---


எம். ஏ. அப்துர் அஸீஸ் அப்துல் குத்தூஸ்
அவர்களால்
சென்னை திருவல்லிக்கேணி
இப்றாஹீம் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 19:7. [அணா 10.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# மகிழ்மணி மாலை.

வெண்பா.

திருவுருவினுருவாய் தெளிவினுருவாய்ச் சிறந்த
கருவினுருவின் னுருவாய்க் கண்டெடுத்த உருமணியே
குருவினுருவேயெனது கோமா நபியிறசூல்
மருமலரி னிருபாதம் மகிழ்ந்தேன்.

## பதம் பல்லவி வாக்கியம்.

ஆதியந்தச்சோதியாய் யனைத்தெயுகளந்தரம்
　　ஆதியுமலிபதாய் யழியதொரு தந்தரம்
ஆதியெங்கு மில்லாதொன்று ஆடாதொரு சந்திரன்
　　ஆதியையறிந்தவர் யழிவாரோ நல் மந்திரம்

ஓரெழுத்தைக்கொண்டுமே வுயிரெழுத்துமாக்கியே
　　ஓசையா யுகந்தசத்தம் வுருமைலாமை நோக்கியே
ஆசையுள்ள வாசியை யருமைமீமில் தாக்கியே
　　நேசமந்த ராஜனுக்கு நேர்மைமந்திரி ரண்டுபேர்.

உச்சியிங் கீழலிபதாம் வுகந்துநிற்கும் மரசனம்
　　பக்ஷமுள்ளலாமுமது படர்ந்தகொடியில் நடுவிலாம்
இச்சையுள்ள மீமுமது விருபுருவம் நெத்தியாம்
　　உச்சிபார்த்து நடத்தும்வேலை யுருமையுள்ள மீமதாம்.

முச்சுடர் யென்றதங்கை மூன்றுபிரிவாய் நின்றதும்
　　இச்சையை யொன்றாகிபார்க்க யேகக்கூடி நின்றது
பச்சைநீலம் சிவப்புவெள்ளை பதபக்த்தியாய் கண்டதும்
　　கக்ஷிதமுள்ள கயிர் கையிலெட்டா தேதையா

ஆவித்தாவிப்பிடித்தாலும் யடங்குதில்லை யேயது
　　மேவியே பழக்கினாலும் மீறிப்போகு தேயது
கோபமில்லாக் கீழ்விழுந்து கும்பிட்டாலு மேயது
　　சாவியில்லா பேயனென்று தள்ளிவிட்ட தேதையா

சாவியென்ற வுயிரது தனித்ததோர் மணியதாம்
மேவியே சிரசுமது கருத்தருவின் மேலதாம்
யாவிவிடுங் கவிசுமண்டும் பாதாளத்திங் கீழதாம்
சாவியெங்கே நிற்குது தலமரிந்து கொள்ளுதாம்

சகலமுமடங்கலும் ஜடலமதுக் குள்ளேதாம்
கடல்களேழு விபரமுங் கருவுமதுக் குள்ளேதாம்
உடலுக்குயிரு துணையென்பது யோசை மணிசப்தந்தாம்
கருவுக்குள் கருவைப்பூட்டி கல்புக்கண்ணால் பாருதாம்

ஏகமாய் யலிபுதான் முன்னிருந்துதே தனிப்பட
லாயிலாக யென்றுசொல்ல லாமுக்குள் தரிப்பட
வாயில்லாத மவுனமந்திரம் வள்ளலான மீமதை
காயில்லாத பழத்தைதின்று கல்புகண்ணால் பாருதாம்

கொண்டதோர் மீமதை குருவணக்க மாக்கியே
ஜண்டாவெண்டு யந்தலாமை சிந்தையி லழுத்தியே
தண்டவேலைசெய்யும் ரண்டுபெயரையுந் தழுவியே
நன்றாய் நாமும் கலந்திட நடுவில்திரை யேனையா

நானும் நீயும்கலந்திட நடுவிலொருஞாயமோ
ஆணும்பெண்ணும் ரண்டையன்றி யடர்ந்த ஜாதி யுண்டுமோ
வாணகம் பூமியையன்றி வையகங்களுண்டுமோ
நானும் நீயும்கலந்திட நடுவில்திரை யேனையா.

என்னுக்குளிருப்பதும் என்னையேய்த்துகொள்வதும்
கண்ணுக்குள் நின்றாடியே கனத்ததெல்லாம் பார்த்ததும்
உண்ணவுமுறங்கவும் முசும்பவோடச் செய்வதும்
நன்றாகவேவுன்செயல் நடுவில் திரையேனையா.

வாசலொன்பதும்நிறைந்த வட்டத்துக்குளோர்தலம்
பேசிடும் சுவாசமதை பிரியமுடந்தான் கட்டி
கூசாவென்ற றாகிலே குடியிருக்கவேமாட்டார்
ஆசையுள்ள லாகுவை யறியத்திரை யேனையா.

லாவுக்குள்ளே ஹக்கது நடுவில்நின்று ஆடுதே
ஆலிவன்றதை தலாமுகூட்டி யனைந்துயின்பங்கொள்ளுதே
தாயமுள்ள மீமுங்கூட்டித் தாமரையிலாடுதே
ஏவலில்லாதொன்றுமில்லை யிடையில் திரையேனையா.

ஆணுமில்லாப் பெண்ணுமில்லா யாருமற்றவநீயே
தோணவுன்னை வுருக்கிப்பார்க்க சூக்ஷியமாக தோணுவாயே
தானமொருபக்கத்தில் நீ தரித்திருக்க மாட்டாயே
நானும் நீயும் கலந்திட நடுவில்திரை யேனையா.

நீ தரிக்கும் நல்லதோர் நிஜமுள்ளதோர் ஓர் தலம்
நானறியப்பார்த்து பார்த்து லாவுக்குன் ஹூதாத்தை
சீனைப்பூட்டி யுன்னிலை செலுத்திய கருத்துள்ளே
தோணுமந்த வேளையில் துலங்குந் திரையேனையா.

அல்லுபகலற்றதும் அனாதியாக நின்றதும்
சொல்லுக்குள் சொல்லுமாகி சூக்ஷியமாக நின்றதும்
கல்லுக்கு ளுயிரிருந்து கனமாவளர்ந் தெழுந்ததும்
அல்லுபகல் நம்மில்கூட யருகில் திரை யேனையா

கிபுலாவை யறிந்துவுன்னைக் கோடிகாலம் பார்த்தாலும்
கல்புகொண்டு நிக்ஷயமுடன் காலாகாலந் திரிந்தாலும்
அக்கிலியென்னும் ஜல்லியாத்தி லழுதழுது மாய்ந்தாலும்
ஒக்குலைஉற்றுப் பார்த்தபிறகு வூடால்திரை ஏனையா

குல்குவல்லா வென்றறிந்துக் குருவிருக்கு மிடமதை
கல்புக்குள்ளழுத்திப்பார்க்க கண்டேனொருசோதியை
அலிபுசோதி லாமுந்திரி யடர்ந்தமீமும் விளக்கதாம்
தெளிவையறியும் வேளையில் திரைநடுவிலேதையா

உன்னைத்தூக்கியணைந்திட வொருவருலும்யேலுமோ
உறக்கஉன்னைப்பார்த்திட யுகந்தவிழியுண்டுமோ
நன்னயமாமதித்திடநல் நாவுகளும்பேசுமோ
என்னையாளுமெஜமானே யிடையில்திரையேனையா

உந்தனுட மந்திரமுபதேசத்தையோதினால்
கந்தரமாயுன்னையான் தான்தெரிந்து கொள்ளவே
சொந்தமுள்ளவொன்பது துவாரங்களைபூட்டிட
நந்தவனச்சோதிக்கு நடுவில்திரையேனையா

சோதியான தீபத்தை சொரூபங்காண யான்றெம்ப
ஆவியான வாசியை யடக்கினேன்நான் றூகுக்குள்
ஏகிஎன்னை கிட்டவந்து என்னவென்று கேழ்க்கையில்
தாவினா னணைந்துகொண்டு சங்கையாகினேனையா

ஹக்கை நேராய் கண்டே னென்பார் கல்பறியா பேதகர்கள்
ஹக்கை நேராய் கண்டவர் கவலையற்றிருப்பவர்
ஹக்கின் ரூபங்கண்டவர் கயாத்தரிந்துணர்ந்தவர்
ஹக்கின்ஜல்லியாத்தை கலந்தணைந்து கொள்ளுவீர்.

ஒக்கத்திரக்க வாயினால் வீரியங்கள் பேசுவார்
ஹக்குயின்ன ரூபமென்று கண்ணிலாதோர் சொல்லுவார்
அக்காள் தங்கை தாய் யென்று யறிந்தவர்போல் பேசுவார்
சுக்கானில்லா தோணிபோல் சுழியில் மாட்டி கொள்ளுவார்.

ஈமானை நிலைப்படுத்த யேக நல்விபரத்தை
ஈமானை யறிந்துநாம் இசுலாமான கோலத்தை
ஈமாநல் விதமறிந்தாலிறக்காமல் நம்காயத்தை
கோமானை யறிந்தவர்கள் கூடழியமாட்டரே.

பிறந்ததும் வளர்ந்ததும் புவியை நம்பியிருந்ததும்
சிறந்தபெண்டு பிள்ளைத்தாய்க்கு தேடித்தேடி யலைந்ததும்
உகந்த தனமாஸ்திவீ டுகப்புக்கொண்டிருந்ததும்
கலந்துவுன்னை நாளையந்த ஹக்கனிடம் காட்டுமோ.

உன்னக்குள் சகலதும் மொளித்துக்கொண்டிருக்குது
அன்னைபிதாதந்தை மூன்றுமாட்டிகொண்டு பார்க்குது
என்னயிவன் செயலென்றுதான் எட்டிஎட்டிப் பார்க்குது
கண்ணைவிழித்து பாராமலுடல்கட்டையை வீணாக்காதே.

ஆரியக்கூத்தாடினாலும் காரியத்திலே யுள்ளம்
ஐந்துபஞ்ச பூதங்கொண்டு யழித்துபார்க்கவேநயம்
தேடத்தேட திரவியங்கள் திரளுவதெல்லாமோசம்
நாட்டை நம்பிக்கொள்ளாதே நமக்கு சதமில்லையே.

என்றைக்கியிருந்தாலும் மிறப்பதொருவேளையே
கொண்டதோர் பள்ளத்தில் குறிப்புவைத்து தள்ளியே
நிண்டவர்கள் சொந்தமுள்ளோர் றெம்பமண்ணை தள்ளுவார்
பெண்டுபிள்ளை யெங்கடா பிரிந்துவோடிப் போச்சுதே.

அக்கக்கா கழர்வதும் யழிந்துயூண மோடுவதும்
முக்கியமாயீ யெரும்பு மோகங்கொண்டு நாடுவதும்
பக்ஷிசாரம் கழுகுநாய் பலபடப்பிலாவதும்
வெக்கமில்லையா நமக்குயான் வேறுபிறப்புவுண்டுமோ.

ஆத்துமா யிருக்கையி லவரவருக்கேன்றதை
ஆத்துமா வறிந்தவர்களவர்கள் கட்டையழியுமோ
ஆத்துமாவை யறிந்திடாம லாகம்பேசும் வீணர்கள்
காத்திலே யலைந்ததூசி போலேயவராகுவார்.

ஐயறிவை பூட்டியே யடர்ந்தயின்பம் யூட்டியே
வையகத்திலின்சானகை வளர்ந்ததென்னகாரணம்
துய்யஹக்கு வின்னதென்று தூன்றிடாதபாவியே
அய்யோவென்று யக்கினியிலாகிடும் பஞ்சாவானே.

ஆனதும்மழிவதுமறிந்தாலுடற் சுத்தமே
தோனுமந்தமற்றதெல்லாம் தூண்டதூண்டதோற்றுமே
ஆண்பெண்ணிரண்டுவகை யறிந்தவர்கள் ஹக்கன்முன்
நாணமில்லாமுன்சென்று நாயன்முன்னே போவாரோ.

ஹக்குமுன்னே போகவும் கனவுகப்புக்கொண்டவன்
தக்கமுதலென்றுசொல்லி தான்பிரியங்கொள்வதும்
சொர்க்க மறுசுகுறுசுலெளஹூ தோன்றினதை பாரென்று
எக்காலமுமெந்தன் கூடவிருந்து கொள்ளுமென்பானே

வாக்கியம் முற்றிற்று.

---

வெண்பா.

சிரித்தால் சிரிக்கும் செப்பினல் செப்பிவிடும்
பரித்தால் பரிக்குமந்தப் பாகையது-மதித்தமொழி
தடுத்தால் தடுக்கும் தானென்று முன்வராது
கடித்தவாய் துடைத்ததுபோல் காட்டு

பதமிராகம் ஆனந்தக்களிப்பு.

எங்கும் நிறைந்திருப்போனே — நான்
ஏறுமிறங்கிடும் நானல்ல நீயே — எங்.

அநுபல்லவி.

மங்காமல் வாழ்வதும் நீயே — என்னை
மாய்கையாய் படைத்து வைத்தாட்டுவதும் நீயே — எங்.

சரணங்கள்.

அன்னைபிதாவுமே கூடி — யுன்னை
அல்லாம லொருசெயல் செய்வாரோ நாடி
கண்ணுக்குள் நீ நின்று ஆடி — அந்த
காக்ஷிகள் நின் பார்த் திருங்கின்றுயோடி — எங்.

உன்னையல்லாச் செயலுண்டோ — உதிரம்
ஊற்றக்குழியி லுருவங்களுண்டோ
தன்னையல்லால் சொரூபமுண்டோ — உன்னை
தவரிடப்புதுவேலை நடப்பதுமுண்டோ — எங்.

ஐந்திலே யரசான முதலே — யாரும்
ஆனந்தமாயெடுத் தணைந்திடுமுதலே
கருவினிலமையாத கடலே — தெரிந்தவர்
கண்டாலு மதிப்பினிலடங்காத புகழே — எங்.

ஆணென்றும் பெண்ணென்று முண்டோ — உன்னை
ஆராவதுங்கூடி பெற்றவருண்டோ

நீர்தான் யாரையும் பெற்றதிண்டோ இல்லை
நிறைந்து வுனைப்போ லிருப்பவருண்டோ எங்.

வந்தவழி யில்லாதாலே உன்னை
வகையிலே யொன்ருக்கி நாமதிக்கக்கூடலே
நன்ருயிருக்கின்ருய் மேலே உந்தன்
நாட்டப்படியே நீ நடத்துருய் நாளே எங்

வந்தவழியை நோக்குதே கெட்ட
வாசியான யெண்ணம் நாசமாக்குதே
உண்டவழியை பார்க்குதே ரண்டும்
மோடியே யதின்பேரிற் மூறிநிற்குதே எங்

உள்ளபொருளை அளித்தால் நாளை
யொருகாசுவாங்கிட யேலுமோ கருத்தால்
யெல்லாமுதலையும் சேர்த்தால் நாளை
யாபாரம் பண்ணிநாம் இருக்கலாம் நயத்தால் எங்

அழிவது மதினலே தானே வித்தை
அறிந்திட்டால் கட்டைகளழியாது தானே
எடுத்தாலும் வழியோடதானே முதல்
இருக்கின்ற பெட்டியி லேற்றிடுந்தானே எங்

உன்னிலை கண்டிடு மன்னன் பெட்டியை
உடைத்தாலுமொருமிக்க கொடுப்பாண்டா மன்னன்
தன்னைத்தானறியாத பெண்ணன் தாவி
தாவியேயாவியை போக்குருன் சொன்னேன் எங்

எடுத்ததைக் கொடுத்தவர்க்கென்ன யவர்
எங்குந்திரிந்து யலைந்தாலுமென்ன
உடுத்தாம விருந்தாலு மென்ன யவர்
ஓடுங்கினலு மழியாதவர் மன்ன எங

காலத்தை வீணிலாக்காதே பட்ட
கட்டையைச்சதமென்று நீ மனதில்தாக்காதே
கோலத்தையுகப்புக்கொள்ளாதே வாசிக்
குதிரை லக்கானை நீ விட்டுனில்லாதே எங்

அன்னைபிதா தந்தையாரு நம்மை
ஆதரித்து வைத்தாள் பவராரு
சொன்னதைச் சொல்பவராரு நல்ல
சுக்கானை நேராக்கி வைத்தங்கே பாரு எங்

சுக்கானை நேராக்கிக் கொண்டால் நாம்
சுகமாக யெங்கிலு மிருக்கலாம் நன்றாய்
சுக்கானைத்தெரியலாம் துண்டாய் பட்ட
கட்டையை யுயிராக்கி வைக்கலாம் நன்றாய் எங்

அழிந்து வீணாப்போவதென்ன அதை
அழித்து யழித்துதா மறுபடைப்பென்ன
கொழுந்திட்டெரிவது நீணா நல்ல
குதிரையைப்பிடியாம லலைந்தேனே வீணா எங்

நீ
உனக்கொரு தனிவீடு வுண்டோ
ஒருவனாகத் தனித்திருப்பது முண்டோ
படுப்பதும் நடப்பது முண்டோ எந்தன்
பாழானகட்டையில், நீ யில்லாமலுண்டோ எங்

அதில்
எறும்புக்கு எண் சாணுடம்பே
இருப்பதினாலல்லோ யேருது கரும்பை
அரும்புக்கு வாசனை யுசும்பை எங்கும்
அணுகாம லொருவஸ்துமாடாது நிறப்ப எங்

கெட்ட
புத்தியால் வீணாகினேனே
பொய்யை நிசமென்று நான் நம்பிருந்தேனே
பத்தரை மாற்றழித்தேனே கெட்ட
பாழான நகைக்காக பொடியைச் சேர்த்தேனே எங்

பொடியைக் கரைத்திடும் புடமே துருத்தி
பூட்டினாலல்லவோ வோட்டிடும் நிசமே
அறிவதை யறிந்திட்டால் வசமே தங்கம்
அழியாது குறையாது யானந்தமயமே எங்

அஞ்சு
மயமென்ற வுபதேசம் பாரு
மலர்ந்துயக்கக்காப் பிரிந்ததைப் பாரு
நிசமென்ற வுயிருச்சிப் பாரு கண்
ரண்டுக்கிடையி லிருக்குதே ஹாஹா எங்

கரு
உடலுக்கு ளமைந்தது அஞ்சு
ஓடியே யெங்கு முலாவுதே பிஞ்சு
படமெங்கும் பாம்புக்கு நஞ்சு அதை
பழக்கினால் நயம் பெற்றிருக்கலாம் கெஞ்சு எங்

அது
கெஞ்சிய பாம்பதையாட்டி
கேழ்க்கின்ற யிரையதை நீ குறையாமல் புகட்டி
ஐந்தெழுத்தைக்கொண்டு ஆட்டி அதை
அடக்கின்ற ஓரெழுத்தைக் கொண்டு பூட்டி எங்

பார்த்திட பாம்பு வுன் வசமே நல்ல
பற்று வைத்துன்னிடம் தந்திடும் விசமே
அத்துமாயெங்கும் திரமே தினம்
அடியேன் முஹம்மது முஹியித்தீன் மனமே. எங்

முற்றிற்று.

---

வெண்பா.

அந்தரத்தி லேறியலைந்தேன் வவ்வால் பிடிக்க
கொந்துலகி லுள்ளதென்று கூறினு - ரிந்தவிதி
தந்திரமாயான்மறித்து தான் பிடித்து பார்க்குமப்போ
வெந்தழ லணுகாத விருழியாம்.

---

பதம் இராகம் தில்தாரு.

லாயிலாக யில்லல்லாகு ஹக்கு லாயிலாக யில்லல்லாகு
லாயிலாக யில்லல்லாகு முஹம்மதுர்ர சூலுல்லாஹி

பச்சைப்புரு க்கூவுதடி வெகு பாசைகள் படிக்குதடி
இச்சை வைக்கப்பச்சைப்புரு ஏகியோடிப்போகுதடி

அந்தரத்திலோர் மரந்தான் ஆகாசத்தில் நிற்குதடி
சுகிர்தமுள்ள நாலு கொப்புமாரு சூழ்ந்தயேகவிருக்ஷமடி

விருக்ஷமுள்ள நல்மரத்தில் வெகுவேடிக்கை யனந்தமடி
பரித்துப்பழந்தின்பதர்க்கு நல்பாதை யறிவாயடி

மரமும்வெள்ளையானதடி நாலு மலர்ந்தகொப்பு பச்சையடி
இலைகள் பூக்கா யேகமடி பழமின்பமுள்ள விரத்தமடி

கொட்டையும்கிடையாதடி குணமுள்ள தோர் தித்திப்படி
எட்டியே பரிப்பதர்க்கு யங்கு ஏறும்பாதை யில்லையடி

அந்தரத்தில் நிற்குதடி வெகு ஆசையைக்கொடுக்குதடி
தந்திரமாய் போகுமுன்னே மரம் தனக்குமுன்னே ஓடுதடி

எந்தவிதத்தால் மரத்தை கண்டுக்கொள்ளவேணுமடி
சொந்தமுள்ள நல்லபழம் தின்றுமையல் கொள்வாயடி

ஆடி ஓடிநிற்கும்நேரம் ஆசைவைத்தாலென்னபலன்
சாடியேவொருபோதையில் மரந்தங்கிநிற்கும் நேரமடி

ஏகமெல்லாந்தானுறக்கம் மூச்சுயேறுவாசியும் தூரப்பு
ஆகமேடையுச்சிவிட்டு வுயிரப்போதானிறங்குதடி

ஏகமாய்பழம் பரிக்கவாயிலிலங்கு லாயிலாத்தொறட்டி
போகும்வாசியையடக்கி நீ பூட்டு மூச்சு ஹூவுடனே

ஹூவென்றதை தம்மடக்கி குன்னென்ற சொல்லாவியுடன்
அவ்வல்லாயிலாகவதை ஆசைச்கொள்ளத் தோணுமடி

தோணுமடித்தான் மரங்காய்த் துலங்கும் பூவுமுட்குள்ளே
காணுதுயிர் றாஹூமதுகூடி கலந்தாடுமவ்வேளையடி

கலந்துக்கொண்டு யேகநல்ல கனகசட்டை பூட்டுமடி
உகந்தபேச்சுபேசிரண்டும் ஊஞ்சலாடும் நேரமடி

கண்மசக்கந்தா னசதிகனத்தமூச்சுக் கொட்டாவியும்
நம்மையாளுமுயிரைப்பார்க்க நாடிகொள்ளவ்வேளையடி

உயிரானது அலிபாகுமே யங்கேயோடும் றாஹூ முஹம்மதியா
தெளிவானது ரண்டுமூன்ருய் கூடித்திரண்டிடு மவ்வேயடி

பச்சையும் சிவப்புநிரம் ரண்டுபாதையாய்த் தெரியுமடி
தச்சுரூபமான நிரமதை தானேகாணவேணுமடி

வெள்ளையும்சரிநிரமே நல்லவேகமுள்ளத்தானுயிரு
அல்லுபகலற்றநேரமது ஆனந்தக்கூத்தாடுதடி

ஆனந்தக்கூத்தாடையிலே நீ யருகில்நின்று ஹூவைப்போற்றி
தானத்தை தவருமலே தாவிக்கோள் அணவில்லையே

அணவில்லை தான்பழக்க வதிசயங்கள் தான்தெரியும்
அவ்வலையறிந்துக்கொண்டால் ஆதியைத் தெரிவாயடி

ஆதிசோதியுன்னுக்குள்ளே வச்சரமு முன்னுக்குள்ளே
நீதிமக்காவுன்னுக்குள்ளே நிறைந்த ரூபமுன்னுக்குள்ளே

வேதபாசை யுன்னுகுள்ளே ஜாதிபிரிவு முன்னுகுல்ளே
ஓதுமுறை யுன்னுக்குள்ளே காதலென்ன தன்னுக்குள்ளே

ஐந்தெழுத்து முன்னுள்ளே யடிஐம்பத்தைந்து உன்னுகுள்ளே
தெழிந்தமுத் துன்னுக்குள்ளே தேடுபொருளுன்னுக்குள்ளே

ஆணுபெண்ணு முன்னுக்குள்ளே ஆட்டுகுட்டி யுன்னுக்குள்ளே
கானகத்திலுள்ளபெறும் கலையைபோல் முழியாதடி

வீணுவியைபோக்காதடி வெறும்வேடிக்கையை பார்க்காதடி
வாணுளைக்குறுக்காதடி நல்லவாசியைத்துலைக்காதடி

கானகத்தில் தானலைய பெருங்கவலை யென்னவந்துதடி
கோனுன்நம் கூடவிருக்கப்பால் குடிக்கலாமேயந்தி சந்தி

அந்திசந்தி தாங்குடித்து கெட்டயடர்ந்தயிருளையறுத்து
சந்திரகாந்தி நல்லுயிரை தான்கலந்து கொள்ளலாமே
கலந்துகொண்டாலென்னபய்யம் ஹக்கையுந் தெரியலாமே
அடர்ந்த அவ்வலையறிந்து ஆனந்தங்கொண்டாடலாமே
ஆனந்தங்கொண்டிடவே யடியேன் முகம்மது முகியித்தீன்
தோணுங்கருத்தை யுரைத்தேன் தோழியரே நீமறகா.

முற்றிற்று.

---

விருத்தம்.

கலமதை மேலேநோக்கிக் கருத்தையூண
கலகலென்ற யோசையுடன் தோனியைக்காண
பவழமரத்திலுயர்ந்த தேனைக்காண
பார்த்தேனடா ஜெகமுழுது முன்னைக்காண
தலமறியாமெனக்குள் தரித்துக்கொண்டு
தாயிளந்த கன்றதுபோல் தவரவிட்டாய்
ஒத்தைவீட்டைவுற்று வுந்தன் வெளிச்சங்காண
உடல்முழுதும் நிறைந்த மயமானேன் யானேன்

விருத்தம்.

ஒத்தையீடு உச்சியின் கீழேயப்பா
உணுவென்ற வோசைக்கி மேலேயப்பா
மச்சமென்றமண்டை வோட்டினருகிலப்பா
மதமென்ற மூளையதுக்குள்ளேயப்பா
உச்சிதமானஊசி புகுதாதப்பா
உற்றுணர்ந்து பார்த்தவர்க்கு பக்தியப்பா
அச்சம்வைத்து யாதுடனே மேலேநோக்க
ஆனந்தக்கயிற்பிடித்தாடலாமே.

விருத்தம்.

மூச்சதுவையடக்கியபின் அந்தரத்தில்
முதல்மந்திரியானவரை கண்டுக்கொண்டு
சாக்ஷியென்றருஜு வாக்கிரண்டாமந்திரி
தான்வேகமுற்றவரைத் கழுவிக்கொண்டு
பார்க்கவேகமலமதை மேலேநோக்கி
பஞ்சணையின் மெத்தையின்மேல் பக்த்தியொன்றை
நோக்கியேமுன்னே சென்று ராஜாவென்று
நுழைந்திடவே யுந்தனுடன் பேசுவானே

விருத்தம்.

அறிந்திட்டால் யாதுமில்லை யடங்காதப்பா
அழியாதுவிதுகாயம் உயிர்தானப்பா
கொழுந்திட்டு நிதநிதமும் மெரியுமப்பா
கோடானகோடிக்காலம் வாழ்வாய்யப்பா
மவுத்தில்லா மருந்தென்ற மூளியப்பா
மண்ணில்விளையாதபூண்டு மலியுமப்பா
யெடுத்துணர்ந்து மனமகிழ்ந்து யணைந்தபேர்கள்
எப்போதும் குறைவில்லா திருப்பார்தாமே

பதம் இராகம் காம்போதி ரூபகதாளம்.

அறிவுகோ லரிவுகோலய்யா அக்குமல்சுகூது
அறிவுகோ லரிவுகோலய்யா அக்குமல்உஜூது
இறிவுகோ லரிவுகோலய்யா அக்குமல்முரூது
அறிவுகோ லரிவுகோலய்யா அக்குமல்தவுகீது

அநுபல்லவி.

தெளிவுக்குகந்திடும் ஹூவென்றதைமனம்
தேடும்தெளிவின் திரையதைப்பார்
அறிவுக்குகந்திடும் ஐந்தாரை தினம்
ஆசைக்கொண்டிடத் தெரிந்தாரே

சரணங்கள்.

குன்குத்தா குன்குத்தாத்தின் சுஹூதுருகுல்குவல்லா
குவெண்டி சுன்மபிரித்த பிக்குறென்னுகலத்தால்
குநூல் கக்கிகிய்யா கரு உந்திகமலம்
கனகபல கையதுமேல் திருசூரியமென்னும்

ஊகுல்குதிசிசென்ற சாயம்கொண்டெழுதி
ரூபம்ஹக்கின் ஜல்லியாத்தின் வெளியாய்
மலுகர்வெளியாகுமே யதின்எக்கின் னகலா
குலுலித்திகாதென்னும் சேர்ந்தும் சேராமல்

வெளியானஹூ ஒளிவைநன்று மனம்
விரும்பும் சுஹூதின் தெரிசனையின்
சலியாதின்ப மெப்போதும் ஜெயர்
தருகும் குருவை துடர்மனதே அறி

ஒகுத்தின் கணக்கை யறியாம் கண்ணுறங்குமப்போ
கல்பின் ஞெளிவின் முழிப்பா கலந்துஹூவே
காதலுடனேஷுஹூது கைவசத்திலாக்க
கல்புகண்ணுடியிலே கனயதிசயங்கள்

சுணக்கிலடங்காவிதமே யெவராலுமதிப்போ
கைகண்டஷுஹூதிதுவே யிவ்வழியின் விபரம்
ஹக்கனுக்குள்ளாரிபீன் அறிந்தெடுத்து
காட்டும் அக்குமல் சுஹூது கக்கனுகந்த

எல்லாசுஹூதுலேயும் நிறம்ப நயம்
இதற்கு சரியா யெதையுரைப்போம்
சொல்லக்கூடா திதுவனுப்பம் நிதம்
சூட்டும்மனதே சுகம்பெறுவோம் அறி

றாகுல் குதுஸிவிபரம் உலகம்புகழ்
ஒருவன் ஆண்பெண்ணறியார்க்கக்கனுக்குள்ளே
ஒளிவில்நின்றும் தருமம் அதில் ரண்டுவகை
ஒன்று ரூகுர்றாகு அறாபில் றாபி
ஆசைமுகம்மதிலே ஹக்கீக்கத்தென்னும்
அந்தரங்கமதுவே படைக்கப்பட்ட
மருளூக் கின்ஸான்கல்பு மஜாசியென்னும்
மருதாமரைப்பூவதிலே நிலையாக நிற்கும்

வெத்தி பொருந்திய ரண்டாம் ரூது நல்ல
விளங்கும் றூருல் ஆரூக்கு
கத்த ரூஹூல் குத்தூஸென்னும் துயிதான
உயிர் ஹக்கதுவே

படைப்பிலடங்காமுதலே மல்கருக்கு மவ்லி
படைத்த இன்ஸானிலே கல்புல் ஹக்கீகி
கண்டத்துமேல் நிலையே அந்தரூஹூல் குத்தூஸி
ரூஹானியென்னும் பேர்நாலு ரூகுல்நாத்திகா
நுடல்பல்லு குத்தியிலே ரூகுல் நாமியா
நுடஈறலில் நிலையே ரூகுல் நாபியா
நுரையீரலின் நிலையே ரூகுல் நகிமி
நுடல்பித்ததின் நிலையே யிதையரிந்துகழ்ந்தாய்
றாகுல்குதுஸி யென்னும் வல்லமைக்கி னுகள்
ஏவல்விலக்கல் ரூகானிநல்
ஆலிம்செய்யது முகம்மதுக்குள் அடியேன்
முகம்மது முகியித்தீ னெடுத்தேன்

ஆசிரிய விருத்தம்

தாக்கி தலமகனை தெளிந்த வாறும்
தங்கையென்ற முத்துடனே புணர்ந்த வாறும்
வாக்களிக்கும் ரத்தினமுடன் பேசு வாறும்
வகைமூன்று பிரிந்தவிதம் தெரிந்த வாறும்

நோக்கியதின் முச்சுடரை பிரிந்த வாறும்
நுக்தான குண்டலியில் துளைந்த வாறும்
தாய்தந்தை யற்றதொன்றை கலந்த வாறும்
தான்கூட்டில் நெருங்கி விளையாடி வாறும்
வாயில்லா மனிதனுடன் பேசு வாறும்
வந்தமதம் நாதநிலை யறிந்த வாறும்
வீட்டில்லா வீடுதனிலிருந்த வாறும்
வெளிவாசலொன்பதையும் பூட்டு வாறும்
ஆடுமது கமலவட்ட வாசல் பாரும்
யதிலிருந்து உச்சியின்கீழ் கொம்பைப் பாரும்
நாடிரண்டும் புனைந்த வீட்டின்வாசல் பாரும்
ராஜாதான் தனித்திருக்கும் அழகைப் பாரும்
கூடியுறவாடிடவே யுள்ள சேரும்
யோசைமணி தம்முடனே புறக்சிப் பாரும்
வொப்பிடிப்பா மாய்கையந்த சூழ்ச்சியம் பாரும்
இவ்விளையாட்டின் ஓட்டமெல்லா மதுவின் கூறும்
பார்தனி லிருந்திடவே செய்யும் பாரும்
அதின்பயனறியா பேர்களுக்கு நஞ்சு பாரும்
தேரிடவே யிதையறிந்து கூடும்பேர்கள்
தேசமெங்கும் நிறைந்துவிளை யாடுவார்தாமே

பதம் இராகம் கமாசு யேகதாளம்.

பல்லவி.

முந்திஞல் சுகமுண்டும் பிந்திஞல் நஷ்டம் ஹக்கை
மோகிக்க யிதுவறிந்தால் யோகமே அஷ்டம்

சரணங்கள்.

குன்குதா தென்றதில் குறித்தசிபத்தேழ்விபரம்
குணமுடனே சொல்லுகிறேன் கோதையரேகேள்
முன்னமே யாசாரம் ஹயாத்தென்னும் உயிர் அது
மோகித்தபடிகள் செய்ய யேவலாறுபேரும்
இல்மென்னும் மறிவுதான் யெட்டிப்பார்க்குதே
இருதைதென்னும் நினைவுமது யின்பம்கொள்ளுதே
குதறத்தென்னும் தத்துவச்சுசூழ்ந்து நிற்குதே
குணமுள்ளதோர் சமுவெனக் கேள்வியாகுதே
பார்த்துநிறைந்த பார்வையது பாசம் கொள்ளுமே
பாம்புடனே கலாம் பேச்சு ஆசை கொள்ளுமே
உடலைந்து பூதத்தினில்உலாவி உள்ளங்கமேவியசிவன்
நலமுடனரசன் ஹயாத்தது உயிரு
நாட்டமெப்படியங்கே காட்டிடுஆறுமே முந்தி

மூலாதாரத்திலே ஊண்டும் உயிருஹக்கு வெகு
மோகமுள்ள புத்திசிற்று கற்றவல்லது
ஆகமே மூலாதாரம் தான்விட்டுதுபார் வெகு
அதிசயங்களான தாமரைப்பூவில் வந்ததுபார்
காபாகவுசியென்னு தலத்தைப் பார்த்ததுபார்
இரு கண்ணுக்கிடையி லிருந்தசீவன் நடந்து போகுதுபார்
மோகமே முஹம்மதியா ரூகுல் சுல்தானீ கனி
யுள்ளபோக யுயிர்ஹக்கு யுகந்துகொள்ளுதுபார்
மோகமுள்ள லிபாசென்னும் சட்டை மூடிக்கொள்ளுமே
ரண்டுமோதிகலந்து யேகசிர்ரை பேசிக்கொள்ளுமே
ஆகவுடல்முழு ஏககட்டயடந்த ஓர்கேள்வி பார்வையற்ற
யேகமாமூச்சொன்று சுவாசமவ்வேளையில்
எண்ணிக்கொள் ஹூவதை பின்பமவ்வேளையில்
ஹக்கும் முஹம்மதும் கூடிக்கலந்ததைப்பார்
உந்திக்கமலம் மூலாதாரம் சென்றுதே உயிர்
முண்டகமலம் மென்றவீட்டை நாடுதே சீவன் உயிர்
மோகங்கொண்ட யேவலப்படி சாடுதே றூஹு
கால்கையசைந்து கண்ணைவிழிக்குதே றூஹுபட்ட
கட்டையை நடக்கச்செய்து ஓட்டுதே றூஹு
வீண் நிலைபனுபக்கா வீதியில் றூஹு
வீண்மூச்சைப்போக்சி வேடிக்கை காட்டுதே ரூஹு
கைகா லுசும்பிய வேளையிலென்ன காரணத்தை தெரிவாய்
ஹக்குமீமுபிரிந்து விட்டால் காட்சியென்ன தெரிவாய்
அலிபது மீமையழைக்கு நேரம்லிபா செனுசட்டை
புகழ்ந்தநேரம் ஜோடியா ரெண்டும் கலந்தநேரம்
சுகம்பெறுவதை சூட்டுமன்னேரம் முந்தி
ஆடிஓடி திரியுங்கட்டை விதத்தை பார்த்தியா நம்மை
ஆட்டியோட்டி நடனம்செய்யும் றூகைப்பார்த்தியா
எவலுயிர் எண்ணப்படி நடந்துதே றூஹு உயிர்க்
கேற்ற விளையாட்டையாடி காட்டுதே றூஹு
உந்திகமல மூளையிலிருக்குதே உயிர் இந்த
உடல்களாடும் ஆட்டமெல்லாம் பார்க்குதே உயிர்
சந்தோஷம்கொண்டிருக்குதது ரூகதைப் பார்க்கத்தன்
தலத்தைவிட்டு தாமைரங்காய் பூவில்வந்திறங்க
கண்டவுடனே ரூகும்கூடி கலந்துகொள்ளுமே
ஹக்கை தெரிசிக்கும் வேளையப்போ கவலைவையுமே

மண்டலம் புகழ் செய்யது முஹம்மது ஆலிம்
மனவைத்திரங்கியே ரதைதனைக்கொடுத்தார்
தண்டன் முஹம்மது முஹியித்தீன் யேழை
சாற்றுங்கவியதை பார்த்திடுவீரே முந்தி

## ஆசிரிய விருத்தம்.

அண்டபிண்ட முந்தன் வுடலுக்குள்ளே
அகார வுகார சிகார மெல்லாம் அறிவுக்குள்ளே
கொண்டதோர் தாய்தந்தை யுடலுக்குள்ளே
கூடிவந்த தமையர் தங்கை தம்பியங்கே
மண்டலமும் கொண்டபுவி வெழியுமங்கே
மனுவறியாமயிதான வீடுமங்கே
சென்றவீட்டின் கோட்டைவாச லொன்பதங்கே
சிரசைவிட்டு நீங்குதலா யிருக்குதங்கே
கண்டமதுமேலே உச்சியின்கீழேயங்கே
கனமான மச்சிவீட்டின் வுள்ளேயங்கே
துண்டாக ஒண்டாத தீபமங்கே
தூண்டுதலையில்லாத விளங்குமங்கே
நன்றாகதீபத்தின் சுடருமங்கே
நடுவீட்டின் மந்திரிக்கி யெத்துதங்கே
கண்டவுடன் மதமுற்ற முதுகாந்தண்டு
ஐந்துகமலமது பாயிதுபார் காந்தமங்கே
நன்றானகேள்விபார்வை பேச்சுமூச்சு
நாக்குமூக்கு காதுமந்த கண்ணுமாச்சு
துண்டாக ஒன்றுவெளி வாசலில்லா
தோன்றுதடா முதுகாந்தண்டு ளாசல்நேராய்
நன்றானராஜாதா மிருக்குமந்த
நல்வீட்டின் தலைவாசல் றஸ்தாநேராய்
கொண்டனேக்க முகம்மதுவை நோட்டமிட்டு
கூடிடவே றஸ்தாவின் பாதைநோக்கி
செண்டதுவின் தாமரைக்கா யிதழ்விரித்து
திரையைந்து புதையலுக்குள் உள்நுழைந்து
கொண்டதோர் விபாசெனும் சட்டைஒன்று
கொழுகிடவே யேகமெல்லா மடக்கமப்போ
துண்டாகயந்தறமா வாசியப்போ
யொன்றிலேபு மணுகாமல் நிற்குமப்போ
நன்றாக விபாசென்று சட்டையிற்குள்
நல்மூச்சை யாதுடனே செலுத்திபாரேன்

பதம் இராகம் தோடி யேகதாளம்.

பல்லவி.

எங்காணு தூக்கம் அதினால்
கிடைக்குமோ சுவர்க்கம்

ஊமையெழுத்தது உச்சியின் கீளங்கே
யொண்டாய்த்தரித் திருக்குது பாரங்கே
மேல்மைசிறந்திடும் யிரு மந்திரிமாருடன்
மேவிக்கொள்ளாமலே ஆவியை வீணாக — ஏன்

குண்டலிபானது நின்றங்கைபார்க்குது
கோடானகோடி விதங்களைக்காட்டுது
மண்டலமெங்குந் திரிவதைப்பாராமல்
மட்டிலடங்காத வேடிக்கை காணாமல் — ஏன்

பிஞ்செழுத்தானது பேசாதிருக்குது
பெற்றபிள்ளை அயின் கத்தாதிருக்குது
அஞ்சாதலாமது ஆங்காரம் கொள்ளுது
ஆடிடும் சக்கரம் வேடிக்கைபாராமல் — ஏன்

முச்சுடரானது உச்சியின் கீளங்கே
முன்னின்றுபேசும் அலிபதைபாரங்கே
அச்சமில்லாவேகம் லாமதுக்குள்ளங்கே
ஆடுதுசக்கரம் ஓடுதுபாராமல் — ஏன்

மீமதைக்கூடினின் மேவிடும் முன்மக்கான்
மெள்ளமெள்ள நடந்தேகிக்கொள்லாமக்கான்
காமக்கயத்தைத்தான் கட்டு மொருமக்கான்
கள்ளனைத்தள்ளி கயத்தை பிடியாமல் — ஏன்

வாசிக்குதிரைதான் வய்யாழிபோடுது
வட்டத்துக்குள்ளங்கே சுத்தித்திரியுது
கூசாமலெந்த யிரையையும் தின்னுது
ஒருவருமில்லையே சவாரியெங்குது — ஏன்

குண்டலிபானத்தை நன்றாய்ப்பழக்கினால்
குதிரையிலேறியே சவாரிநோக்கினால்
அண்டபிண்டமெங்கு மாளலாம் நிதசெரி
அழியாமலெப்போது மிருப்பதை பாராமல் — ஏன்

ஹூவ்வென்ற சொல்லால் குருமீமேதான்கற்று
குன்னென்றவெள்ளம் கொடிலாமில் முன்சென்று
அவ்வலலிபு அணலில்லைத்தான்கன்று
ஆரூக்குமகரூக்கு யாவல்தெளியாமல் — ஏன்

நித்திரையில் யெட்டு வசாலைபூட்டிட
நிதசெரியும்போகும் வாசியைப்பார்த்திட
முட்டம்பூவான நல்தாமரை மலர்ந்திட
முன்னென்றெழுத்தான அலிபைக்கலக்காமல் — ஏன்

கூடியபிறண்டும் குலாவியவேளையில்
கூடுகளெல்லாம் ஒடுங்கியே வேளையில்
நாடும் யெண்ணம் நிலைகள் தவறாமல்
ராஜாவைக்கண்டு மகிழ்ந்து நீ பேசாமல் என்

பொம்மையில் காத்துப்பிடித்து யிருக்குமோ
போகாது நிச்சியமென்றுநினைத்திரோ
நம்மையா யெப்போதும் நகருளயிருந்திரோ
நம்பாதை யிதுகாயம் வம்பெண்டு யெண்ணாமல் என்

ஹூவ்வுக்குள் ஹூவ்வைக்குருவாய்யடக்கிய
கோட்டையென்றவாசிமீம் முல்மடக்கிய
தவ்வியலாமே தழுவிக்கொண்டேத்தியே
தாசன் முகம்மது முகியித்தீன் கூறியே என்

முற்றிற்று.

---

பதம் இராகம் தோடி ஜம்பை தாளம்.

ஆடுவாய்மயிலே யலிபுடன் கூடுவாய் குயிலே நிதசெரி
நாடுவாய்முதலே நிஜமென்று சாடுவாயதிலே
ஆகஷண்டியடியலிபது ஆண்பெண்ணற்றதடி பலவிதம்
யேகமாகயெங்கும் நிரைந்திலங்கிடும் யேற்றராஜனடி
கண்டத்தின் மேலேசிறபுடனின் றிலங்குதடி
தனிமக்காம் கன்றுபூறித்தை மனம்கொண்டு தண்டம்செய்வாடி
எப்போது நிரைந்தழியாத யேற்றநாதனடி
மறைபொருள்யின்பதுன்பம் காட்டும் அவனல்லாயாருமில்லையடி
சொந்தமுள்ள
நெற்றியினுள்ளயலிபுடநேசமீமென்னடி
பற்றம்வைத்ததுக்குபுரைத்ததும்பாவை யாடுதடி
கண்விழிக்குதடி செவியுறல கைகாலாடுதடி
நடத்திட நட்டியநரம்பும் யிளவிய சட்டமாடுதடி
முள்பிரளுதடி சதைரெத்தம் முன் யின்னுகுதடி
நடத்திடசொல்படி நடத்தயலிபுதான் ஜோக்குகொள்ளுதடி
உச்சியின்கிழே யுணுவென்ற ஓசைக்கிமேலே அலிபுதான்
அச்சமில்லாதொருலாவுக்குள்ளே யாடுதுபாரடி
ஆடுதேலாவுக்குளடந்தமீம்தேடுதே யலிபைகலந்திட
நாடுதேலாவே ராஜாவென்று தேடுதேமுதலே
தேடியமீம்தாம்மலைந்திட திரையிலாவுக்குள்ளே அலிபது
நாடிடுமீமையணைத்திட நாட்டம் கொள்ளுமடி
லாதிரைநீக்கிரகசியநேத்தி யென்றழைத்து திரைக்குள்
போத்தியயிதழால் முகம்மதே பூரித்ததலிபு

பூரிக்கும்போதே யுடலுக்குள்
போகும் வாசியெட்டு தலங்களு
மோடியேயழைத்து வொருவாசி யூண்டிடும் வேளை
முட்டம் பூதாமரை மலர்ந்து முகம்மதுமலிபூம்மதில்கூடி
கொட்டும் சோபனமும் விளையாட்டும் கூத்து
களனந்தம் ஆனந்தங்கொண்டே விளையாடும்
யாசக்கானநேரம் அப்போதினில்
தானத்தைவிட்டுத் தவராமலத்தாவிக்கொள் நினவே
நினவைநெருக்கி வாசியென்ற
நேசமூச்சடக்கி யனல்ஹறாவை
குருவைநெருக்கியதின்வழிக்கூடிக்கொள் சந்திப்பை
சந்திப்பைக்கூடியுபதேசந்தானுரைக்குமப்போயலிபது
சொந்தவிதையென்று ஓந்தமூச்சை கூட்டிக்கொள்ளுமடி
கொண்டதின்வாசிக் குதிரைதான்
நின்றிலங்குதடி யுனைத்தூக்கி
அண்டபிண்டமெங்கு சுத்திவிளையாடி யோடுமடி
ஏகமெங்குநிறைந்திருப்பதையின்பங் கொள்ளாமல்பனுவதை
ஆவல்கொண்டதினலென்னபலன் மாள்வதைச் சொல்லடி
காத்துபோனலோ யுடலெல்லாம்
கட்டையாச்சுதடி பட்டமரம் பூத்துக்காய்ப்பதுண்டோ
யதின்பழம் பொசிப்பாருமுண்டோ
அக்கினியில்பஞ்சுசிக்கினதை
யாறெடுப்பாரடி யெனக்குசொல்
கொஞ்சிடும்புவியை சதமென்று நெஞ்சில்வையாதடி
அன்னதந்தை பிதாயிருந்துதான்
யாள்வாறென்னபலன் யெனக்குச்சொல் கண்ணின்
மணியாகவே பெற்றபிள்ளை கட்டைக்கென்னசதம் ஆடு

முற்றிற்று.

---

பதம் இராகம்

பல்லவி.

வாசியறியாத ஆண்பிள்ளாய்—உந்தன்
வல்லமையைக்காட்ட வாம்பிள்ளாய்

அநுபல்லவி

காசிராமேஸ்வரம் கணமாகயலைந்தாலும்
கட்டையைநிலைத்திட காட்டிடயேலாது
வாசியின்குதிரையைப்பிடித்திடும் வல்லவன்
வருவானேபவனியாய் தெருவெங்கும் சுத்திட வாசி

சரணங்கள்.

இன்ஸானாநாமள் பிறந்து வளர்ந்திட்டால்
யேத்தம் யிரக்கந் தெரியடா—நலம்
ஐந்தாருகாரியம் புண்மையென்றுமணம்
ஆசையைவைத்தங்கே பாரடா—அதில்
பிஞ்செழுத்தானது பேசாதிருக்குது
பேசிடநீன் தூண்டி கொள்ளடா—ஜெயம்
அஞ்சாத என்றது வாசிலக்கானதை
ஆணென்றும் சொல்லிவிடுந்தாமடா
கஞ்சாவின்கள்ளை கணக்கில்லாமலுண்டு
கட்டியநாய்போல் முட்டிக்கிழவிழுத்து
பஞ்சம்பிழைத்திட மஸ்தான் கோலங்கொண்டு
பாசாங்கம் ஓதுவாம்வாசிநிலையரியான் வாசி
கண்டமென்றும்சொல்லு முண்டத்தின் மேலங்கே
காச்சியனங்கங்கள் பாரேடா—ஒன்று
நண்டாக சிம்மாசனத்தி லிருந்திடும்
ராஜாதான் உச்சியின் கீழடா—கொடி
முண்டங்கலெங்குமே சுத்திபிடித்திடும்
முகியித்தீனென்டதோர் லாமடா—அருகில்
நின்றுயிலங்கிடும் யிறுபுறுவமதில்
நேசமுள்ள யாசை மீமடா
கண்டுபிடித்து கலந்துசுரமுற்று
காணப்பொருளை கலந்துமனம்கொண்டு
மன்றாடிகெஞ்சிய மீமைப்பழகினால்
மாராதலாமுட கோட்டையின் வாசியாம். வாசி
லாவென்ற சிம்மா சனத்துக்குள்ளேயங்கே
ராஜாயிருக்கின்ற வீடடா—தூண்
பேவியேநாலு படியன்பத்தைந்தது
மேன்மை சிறந்திடும் வீடடா—அதில்
காவலதிகம் கரடி புலி சிங்கம்
கண்டால் துறத்திடும் தாமடா—மெள்ள
லாவெபழக்கி நீ லாஹூவென்றோதிட
நாட்டமுறுதுகள் தாமடா
ஆவெண்டஹக்கு அழியாப்பொருளது
ஆனந்தம் கொண்டிடும்லாவதுக்குள் நின்று
லாஹூவென்றோதின சத்தமுழங்கிட
ராஜாதிரும்புவான் வாசியறியடா. வாசி
முன்னுவிருந்த நொக்கத்தின்னலிபு

முளையானதெப்படி தானடா—யது
தன்னால்முளைத்ததும் தாயீன்று வந்ததும்
தான்காட்டுவாரிங்கே சொல்லடா—யேகம்
பெண்ணாணுமில்லாம லொன்றாயிருந்து
பிரிந்தவிதமதை பாரடா—யப்போ
தன்னால்சுழித்து சுக்குனென்று வந்ததோர்
தாயகர் மீமது தாமடா
எண்ணாதகோடிக ளெத்தனைக்காலமோ
ஏகமாறெண்டும் வளைந்துபிருந்ததும்
பெண்ணாணும் காட்டிடத்தண்டாப் பிரிந்ததும்
பேசும்வாசியதை மீமுல் பூட்டியதும்
பூட்டியமீமை பிடித்துபலவண்ணம்
பெண்ணாணுறெண்டுக்குங் கரமடா—விதம்
காட்டிப்படைத்து நல்வாசிலக்கானதை
கையில்பிடித்துக் கொண்டானடா—யேப்பா
நோட்டங்களெல்லாங் கயத்ததுமேலே
நுழையாதுலாமுக்குள் பாரடா—அந்த
நாட்டகபத்தைதான் லாமுக்குள்ளேசுந்தி
ராஜாநடுவி லிருப்பாண்டா
தேட்டமாராஜாவை கண்டுபிடித்திட
சிக்குங்கயத்தின் விதத்தையரிந்திட
நாட்டத்தையொன்றாக்கி றெண்டைவிலக்கிட
நல்லகயத்தைத் தானள்ளிப்பிடித்திட
என்றைக்கிருந்தாலு மிரப்பதொருகாலம்
என்றுமனதி லெண்ணடா—சதம்
பெண்டு பிள்ளை யக்காள் தங்கையர் தந்தை
பிரயோசனமில்லையே தானடா—ஏமன்
கண்டுபிடித்திடும் வேளையில்யாரை நீன்
காட்டிக்கொடுத்திட போரட—ஹக்கை
நன்றாயரிந்துநல் வாசியரிந்திட்டால்
நல்லசினேகிதன் ஏமண்டா
கொண்டுபழகி குணமாகயெங்கிலும்
கோடானகோடிகள் காலந்திரியலாம்
நன்றான ஹக்கது லாமுக்குள்ளேவாசி
நாட்டத்தைக்கொண்டுநல் நோட்டமறியடா வாசி
புவியைக்சதமென்று யெண்ணிப்பணத்தை
பொய்சொல்லித்தேடியே சாகட்டும்—எங்கும்
தெரியவே அத்தர் சவ்வாது பன்னீர்களை
தேசியாசைக்கொள்ள பூசட்டுப்—பெரு

முதலாளியாகவே தெரிந்திட மெத்தைகள்
மேமாடிகட்டி கொண்டிருக்கட்டும்—நல்ல
குருவரியாமலே நானென்ற ஆங்காரம்
பொய்க்கூட்டைச்சதமென்று பேசட்டும்
நிலையறியாத வனிருந்தென்ன இரந்தென்ன
நெருப்புக்குயிரையாக ஜடலத்தை வளர்த்தென்ன
கலையையிழந்தமா னிருந்தென்ன யிறந்தென்ன
கணக்கறியாதவன் புவியிற்பிறந்தென்ன வாசி

சட்டைசறுவந்திட்டு தங்கமணிகள்பூட்டி
தன்னழகைவெளியில் காட்டட்டும்—பறி
ஒட்டையானைரதமேறியே உட்கார்ந்து
ஊரெங்கும் சுற்றி உலாவட்டும்—கால்
கட்டையவிழ்த்துவிட்ட கழுதையைப்போலோடி
கனத்தஜடலமதைத் தேத்தட்டும்—கெட்ட
முண்டங்களாகிய பெண்டாட்டிபிள்ளைக்கு
மூர்க்கமாய் சொத்துகள் தேடட்டும்
கட்டியவாசி கணக்குமுடிந்ததின்
கட்டையைவிட்டது எட்டியேபோய்விடும்
கொட்டியேமூர்க்கமும் தேடும்பணங்காசும்
ஒன்றும்புதவாது நன்றாயரிந்துக்கொள் வாசி

பெற்றபிள்ளையென்று உற்றுஉற்றுப்பார்த்து
பெருமைக்கொண்டுயவன் சாகட்டும்—சுத்த
பத்தினியென்றவன் உற்றமனவியை
பார்த்துப்பார்த்து மூச்சை போக்கட்டும்—நல்ல
றெத்தினக்கம்பளி கட்டிலின் மெத்தையில்
நிதசெறியும் படுத்துறங்கட்டும்—பணத்தை
பெட்டகத்தில்வைத்து பூட்டித்துறந்தவன்
பூலோகம் பார்த்திடச்செய்யட்டும்
எட்டாது ஒன்றுதான் யாதும்சதமில்லை
இதுகாயம் கட்டைக்கு நிட்சியபலனில்லை
கவிகாட்டும் முகம்மது முகியித்தீன் சொல்நிலை
கட்டையைநிலைத்திட நாட்டிடயேலுமோ வாசி

முற்றிற்று.

---

பதம் இராகம் மோகனம் ஆதி தாளம்

ஆயெந்தன் பெண்கிளியே அறியேன் லிகாவிபரம்
அந்தயாதி நயசோதி எங்குமோதி யழியாதநல்சாதி
ஆதியானயலிபு யனத்துக்குயிரதுடி

அஹதானவன் சமதானவன்
அடங்காதவன் யழியாதமன்னவன்
நேசமதை சூழ்ந்த நிறைந்த லாமீமாம்
றெண்டுகீழே ஹக்குமேலே
உச்சின்மூளை உயிர்தானே நிண்டாடிடும்
ஆடுமதின்கீழே யடங்தலாம் கொடியாம்
அண்ணல்ராஜா மரைபோஸா காபுகபுஸா கண்புறு
வத்தின் நேச நிண்டுயிலங்கிய தான் நிரைந்தயலிபைநோக்கி
நெரியான வழிதோண யெங்கோன பொம்மை தான்சுத்திய
ஆட்டியக்காட்டுதடி அனந்த விளையாட்டை
அந்த ஆதியிதைகோதி உச்சிமீதியுகழ்ந்து யிருந்துதான்
வேடிக்கை காட்டுதடி விளையாடும் பொம்மையிதை
நல்வீடு யிதுகாடு பொய்க்கேடு
பொம்மை நாட்டத்தைப்பார்த்திட
சுத்தியிழுத்திடுமே பஞு சுகத்தைக்காட்டிடுமே
அதைச்சூழ்ந்து நிசமேர்ந்து
பஞுப்பூர்ந்து கட்டைபாழாகாமல் நிசம்
வெத்திபகாயழகை விரும்பேன் ஜெயந்தானே
விளையாட்டைவிட்டு ஓட்டன் நல்லநாட்டை சிந்தை
நோட்டமிட்டிட
கத்தோனுரைத்த நல்லகலிமா பொருளறிந்து
ஹக்குதான நல்லகோணமைதான மலாந்தனல் வீட்டிலே
உட்கார்ந்திருப்பானே யெங்குமோடித்திரிவானே
அதையுத்து பயம்வைத்து புத்திகத்துசொல்ல
நத்தியேபார்த்திட ஏகவெளிச்சமடி யிலங்குமுனக்கெதிரே
அதைவர்ந்து மணங்கூர்ந்து ஜெயம்பூர்ந்து
மணமுகழ்ந்துக் கொள்கையில்
என்னபயம்நமக்கு எஜமான் கூடயிருக்க
யாருநம்மைமீறியும்மை கோறிதம்மை வாதுகள் செய்வாரோ
எமனுந்தானேடுவான் எஜமானைத்தான் கலந்தால்
நம்மளைதிர்த்து மொழிகொடுத்து ஜெயமெடுத்து
பொருளுரைத்துக்காட்டிட்
க்கன்முதலிருண்டு கனமாயுகப்புகொண்டு, கனநாட்ட
மெல்லாமோட்டா ஜெயநோட்டம் சிந்தையாட்டமுமாகிய
ஐந்தாரு காரியத்தை யழித்தே யெடுத்துரைக்க
நல்லயாசை மனநேசம் விசுவாசம் உயிர்நேசமாகுவார்
ஏவலைத்தானுரைக்க யெடுத்தே நடத்திடுவார்
நம்மளெங்கும் போய்த்தங்கும் நயம்பொங்கும்
முகம்மது முகியிதீன் யெங்கும் பிறசங்மாம் ஆமெய்க்

பதம் இராகம் சங்கராபரணம் சாப்புதாளம்

பல்லவி.

அந்தால் தெரியுதே நந்தாமணி விளக்கு
இந்தா யெரியுதே பாரு

அநுபல்லவி

சொந்தம் நிரைந்தயுயிராம் யெங்கும்கூட்சத்திலான பயிராம்
கந்தம் கமழும்வாசம் தந்துயுதவும் நாளை
நந்தவனக்சோலையில் சொந்தமா சேர்க்குஞ்சோதி அந்

சரணங்கள்.

கண்டத்துக்குமேலேயங்கே நின்றேயெரியுதேயென்
கண்ணேதெரியவில்லையோ பெரும்
காரணமானயுதிப்பை தானாக யெண்ணயெண்ண
கைகொண்டு தூண்டுவதல்லவோ நல்ல
மண்டலமெல்லா மிழுத்து நன்றாகசுத்திவரும்
மாயமுள்ள றாகுமல்லவோ கூட
தண்டவேலைசெய்யும் மூன்றுபேருமே சேர்ந்துக்கொண்டு
தான்கூடி போகவில்லையோ

நன்று யிழுத்து விடுமே
பொம்மையை நாட்டி நடனம் செய்யுமே

துண்டாகசோதியது நன்றாயிருந்து கொண்டு
தண்டவேலைசெய்யும் பேரைக்கண்டு பூரிக்கும் சோதி
ஆதியின்னுதிப்பல்லாது யாடாதொரு வேலையும்
ஐந்தெழுத்தி லொன்றை நீக்கடி யது
மாயமுள்ளசோதி யபாய மாகயுன்னுக்குள்
உபாயமாக நிர்க்குதங்கடி நல்ல
காயினில் பழுத்ததல்ல காமத்தில் வடிந்ததல்ல
ஆணுமல்ல பெண்ணுமல்லடி யது
தேயாது யெப்போதும் தீர்க்காயிசையுடைய
தீண்டாமணி விளக்கடி

காயாக நாலுமாச்சே
கனிவிட்டே பிரிந்து போச்சே

மாயமுள்ள நல்லகனி காயோடே சேர்ந்திருக்க
மேயமேயத் தான்கொடுக்க ஓயாதெரியும் சோதி
நல்லவாசியென்ற யெண்ணமதை நேசித்து
ஒன்றாக்கி வைத்தால்
வட்டம்யொரு கோட்டையாகுமே நல்ல

நேசித்த கோட்டைக்கி யொன்பதுவாசலின்
ஒன்றைநீக்கி
நிறைந்த யெட்டையும் பூட்டுமே பொல்லா
தோசியைவிட்டு யொழித்து துய்யமாயிருந்துகொண்டு
தூங்காமல் தூக்கிபாருமே யப்போ
நேசிக்கும்லா அலாயென்ற நிறைந்தயுபதேசமதை
நேராக்கும் யுந்தன் கருத்தை

பசாங்கம் மாறிப்போகுமே
பசும்பொன்னல் சுரூபம் காணுமே

ஆசைநிறைந்த வுயிரானந்தங்கொள்ளு முன்னே
வாசியைநேரிலாக்க வந்துநிற்கும் சோதியது அந்த
காலகாலந்தான் புலம்பி வீணிலைக்கருத்தைப்போக்கி
கண்டபுதுமையை சொல்லடி நல்ல
வேளையேயின்னேரமென்று யறியாதமட்டிலும் நின்
வீடுவந்து சேரமாட்டாடி தோளன்
காலன்வந்து யுன்னைசூழ்ந்து கதறிபிடிக்குமந்த
காரணத்தை கொஞ்சம் சொல்லடி நல்ல
யின்னேரமென்று தானரிந்தால் நெருங்கு முன்ன
மைகன்று நேசித்துப்பழகலாமடி

பாளான ஆவிபோனல்
பட்டகட்டைக்குச் சொந்தமென்ன

வீணாவியே போக்காதென்று விடுத்தேன்
முகம்மது முகியித்தீன்
தோணுங்கருத்தை யுரைத்தேன் தோழியரே நீன்மறகா

---

பதம் இராகம் ஏகதோடி சாப்புதாளம்.

பல்லவி.

ஆதியானயலிபின் முத்தது ஆசக்காகியேவிளைந்த முத்தது, சோதியென்றுமே தெழிந்த முத்தது சுக்கூனை நின்றுவளர்ந்த முத்தது, நீதியென்றுமே யெழுந்தமுத்தது நேசங்கொண்டிட பிரிந்தமுத்தது, சாதிமுத்தின் சுடர்மணி முத்தையான் தாவிக் கொண்டேனே, முகியித்தீன் சீர்பாதம் மேவிக்கொண்டேனே.

எங்குநிரைந்துயிலங்கும் முத்தது ஏகமாகநின்றாடிடுமுத்தது, அங்கமெல்லாம் விளைந்தமுத்தது ஆங்காரத்துடன் பெசுமுத்தது, கண்களில் விளையாடுமுத்தது ஹக்குதானென்று பேசுமுத்தது, சங்கைமுத்தின் தலைமுறைமுத்தை யான் தாவிக்கொண்டேனே, முகியித்தீன் சீர்பாதம் மேவிக்கொண்டேனே.

ஏகமாக நின்றிலங்குமுத்தது ஏற்றராஜாவுக்கடுத்த முத்தது, ஆகயோசனை யுகந்தமுத்தது அரசின் சொல்படி நடத்து முத்தது, போகவரவே நடத்துமுத்தது பொம்மையை விளையாட்டு முத்தது, காதல் முத்தினருள்மணி முத்தையான் காதல் கொண்டேனே முகியித்தீன் சீர்பாதம் மேவிக்கொண்டேனே.

தாய்தந்தைக்கு வுகந்தமுத்தது சமதாகயெங்கும் படர்ந்த முத்தது, ஊமையெழுத்தின் பேசாமுத்தது ஓசைகொடுத்து காட்டு முத்தது, எமனைக்கட்டி யடிக்கு முத்தது எவலைத்தட்டி விலக்கு முத்தது, சீமைமுத்தின் ஜயமுள்ள முத்துடன் சேர்ந்துக்கொண்டேனே, முகியித்தீன் சீர்பாதம் பூண்டுக்கொண்டேனே

அவ்வலில் உருவான முத்தது ஆகயிருளில் விளைந்த முத்தது தவ்வியே தீபமானமுத்தது ஜாதிபிரிக்க விளைந்த முத்தது, நவ்வியே நாகலிக்கமுத்தது ராஜாவை யேர்ந்துக்கொள்ளும் முத்தது, பூவின் முத்தின் புகழ்பெற்ற முத்தையான் பூட்டிக்கொண்டேனே முகியித்தீன் சீர்பாதம் போற்றிக் கொண்டேனே

பிஞ்செமுத்தினில் பிரிந்த முத்தது பெருமைகொண்டு நல் விளைந்த முத்தது, ஐந்துக்கமல வாசி முத்தது ஆடுங்கமலக் கோட்டை முத்தது, வஞ்சகமிருளறுக்கு முத்தது வாசலொன்பதும் நிரைந்த முத்தது கொஞ்சுமுத்தின் குருமணிமுத்துடன் கூடிக்கொண்டேனே, முகியித்தீன் சீர்பாதம் தேடிக்கொண்டேனே

வாசிக்கயத்தைபளந்தமுத்தது வட்டத்தில்நின்றுடும்முத்தது பேசுமயிலையேர்ந்தமுத்தது பெருமைகொண்டுநல்விளைந்த முத்தது, ஆசையின் மஹாருக்கின்முத்தது, ஆழிக்கடலி லமைந்த முத்தது, ஓசைமுத்தினருள் மணி முத்தையா யூண்டிக்கொண்டேனே, முகியித்தீன் சீர்பாதம் வேண்டிக்கொண்டேனே

சாதிலிங்கத்தின் விங்கமுத்தது தஹ்த்தாறுவெங்குந் தெரிந்த முத்தது, லாவென்றபேரை யேர்ந்தமுத்தது நல்ல கொடியை சூழ்ந்தமுத்தது, ஆவென்றஹக்கை யணைக்கும் முத்தது அருமை மீமுடன் தழுவுமுத்தது, நாவின்முத்தின் நடுமணி முத்தையான் நாடிக்கொண்டேனே, முகியித்தீன் சீர்பாதம் தேடிக்கொண்டேனே

வேகத்தின்வேகம் விளைந்த முத்தது வெற்றிக் கொடியை விரித்த முத்தது, ஆகத்தினுகம் புணர்ந்த முத்தது அஹமதுக்கும் சிறந்த முத்தது, தாபத்தைத் தீர்த்த சமதின் முத்தது தானென்று வலுபேசுமுத்தது, கோபமுத்தின் குருமணி முத்துடன் கூடிக்கொண்டேனே, முகியித்தீன் சீர்பாதம் நாடிக்கொண்டேனே

ஆதி ஆசக்கில் விளைந்த முத்தது ஆரெடுத்தாலும் மதியா முத்தது, நீதியலிபின் நிறைந்த முத்தது நிரைசெரியும் பார்த்து

கந்த முத்தது, காதல் வாசிக்கயத்தின் முத்தது ஹக்குவைத்து விளையாடும் முத்தது சோதிமுத்தின் சுடர்மணி முத்தையான் தூண்டிக்கொண்டேனே முகியித்தீன் சீர்பாதம்வேண்டிக் கொண்டேனே.

ஒண்டிமரத்தில் விளைந்த முத்தது ஓடி நாங்காய் பிரிந்த முத்தது, நன்றாகரெண்டை யகற்று முத்தது நல்ல கண்டத்தின் மேலே முத்தது, துண்டாகயுச்சியின் கீழே ராஜாக்கு துலங்கு மந்திரியான முத்தது, நன்றாக முத்தின் மீமின் முத்தையான் நயந்துக்கொண்டேனே முகியித்தீன் சீர்பாதம் தயந்துக் கொண்டேனே

அல்லுபகலையரியாமுத்தது யாரழைத்தாலும் கூவுமுத்தது, சொல்லுக்குச்சொல்லுச் சொல்லும் முத்தது தூண்டிடாமே நின்றெரியுமுத்தது

கலைக்கட்டுமுத்தது ஆசைபெருகச் செய்திடுமுத்தது, நல்ல முத்தின் நயமணி முத்தையான் நம்பிக்கொண்டேனே, முகியித்தீன் சீர்பாதம் நாடிக்கொண்டேனே

சொந்தம்நிறைந்த சோதி முத்தது சூட்சியாக நின்றாடும் முத்தது, கந்தங்கமழும் வாசமுத்தது கனபவுசையுமோர்ந்த முத்தது, அந்தறத்தில் நின்றாடுமுத்தது ஆகங்குளிர்ந்த யருமை முத்தது, சிந்தைமுத்தின் ஜெயமுள்ளமுத்துடன் சேர்ந்துக் கொண்டேனே, முகியித்தீன் சீர்பாதம் யேந்துக் கொண்டேனே

ஈறலின் கொழுந்தானமுத்தது யாருகந்தாலும் சேர்க்கு முத்தது, பாரவேதினைதுலக்கும் முத்தது பாதாரந்தந்துதவு முத்தது, காதல் முகம்மது முகியித்தீன் கட்டையை கரைசேர்க்கு முத்தது, கண்ணின் முத்தின் ஜெயமணி முத்தென்று காதல் கொண்டேனே, முகியித்தீன் சீர்பாதம் மேவிக்கொண்டேனே

---

பதம் பல்லவி

குன்னென்ற நினவது மறகாதே
பெரும்குருவின் நிலையரிந்த வழியது மறகாதே குன்

அநுபல்லவி

தம்மடக்கி நினவே சாற்றியே பாரு
ஜடலமுழுதிலெங்கு முழங்கிடும் தேரு
கண்ணதை யிருத்தி யெக்கல்பதால் கூரு
ஹக்குமுகம்மதுட காட்சியைப் பாரு குன்
கண்டத்துக்கீழொன்றுமில்லை பொய்க்கூடு
காட்சி சிறந்திலங்கும் நாசியில்லோடு

மண்டை உச்சியென்ற மகராஜன்வீடு
மாணிக்கதீபமதை மணங்கொண்டு நாடு ... குன்

முக்கோணமுழுதிலும் மோடியேகிற்கும்
மூலாதாரத்தின் வழியாகவேபார்க்கும்
ஹக்குமுகம்மதுவை கலந்தங்கைசேர்க்கும்
கட்டையுடலானதும் பெட்டிவாசி நோக்கும் குன்

ஆசைத்தோனிமுழங்கும் மணியதுதானே
அஹதுயுஹதுக்கும் சிறந்திடுந்தேனே
நேசம்விவாவுல் கம்ந்து கொடியுடல்தானே
நிரைந்த முச்சுடரினில் நடுவிர்க்குந்தானே குன்

பாம்புக்குநஞ்சது பழகியேபாரு
படமெடுத்தாடினுலுங் கொத்தாதுநேரு
நேர்மையுபதேசத்தை நிதசெரிகூறு
நிரைந்ததீன்வழியென்ற நேர்மையில்சாரு குன்

காந்தமென்பது மணிபோசைகிதோணியே
ஹக்கனுக்கின்பமது காட்டியக்கனியே
சேர்ந்தேன் ஒன்னிடமென்று சார்ந்திடுமணியே
சேதமாகாமல் உடலிருந்திடத்தணியே குன்

குன்னென்றயுபதேசம் கொடுப்பார்களனந்தம்
கோடானகோடி கொண்டலேவாகளனந்தம்
ஜெம்மல்ஒஜூதைப் பார்க்கத்திரிவார்களனந்தம்
திரையை நீக்கிபாராமல் திகைப்பார்களனந்தம் குன்

குன்னென்ற சொல்லுக்கு யின்னதுகோலே
கொடியதை நீக்கிட தெரிந்திடுசாலே
நம்மளுடலுக்குன் ஒஜூது முன்னாலே
நாடும் முகம்மது முசியித்தீன் சொல்லுபோலவே குன்

யேசல்

சந்திரசூரிய மென்னுமய்யலே ஹக்கை
சந்திக்கும் விதமென்ன சய்யலே ஜெய
சுந்தரஜூயமுள்ள துல்யலே செய்தி
சொல்லவேமணம் வைப்பாய் தையலே

தையலென்றே கூருமன்னவா குன்ஹூ
தாத்துசிபத்தேழு அல்லவா நல்ல
துய்யகயாத்ததை விள்ளவா அதை
சூழ்ந்த சிபத்தாரை சொல்லவா

சொல்லவாயென்றிடும் வல்லியே செவி
சுகம்பெற சிபத்தாரை விள்வியே நான்

செல்லவே தெரிசிக்கும் ஜெல்வியே நேரம்
தெரியவே யெனக்குரை சொல்வியே

சொல்லெனும்யில்மது அறிவுதான் கல்பு
சொல்லும்யிரு தத்து நினவுதான் வஹு
கொதரத்து தத்துவமும் சம்குதான் பார்க்க
குணமாகவே கேட்கும் செவியே தான்

செவிக்குப்பின்னலே விதமென்று யெந்தன்
சேயிழையேசொல்லு அறிவென்றுஜூய
பசரெனும் சொல்வது பாருவைதான் கல்வி
பகரும்கலாமென்னும் பேச்சுத்தான்

பேச்சுடன் ஐந்துதான் கூடியேயென்ன
பிரபல்லியம் நடத்தும் தோழியேநயம்
போற்றிடு மூயிறது யிதுகளையெந்த
புகழாகவைற்றதை விள்வியே

விள்ளென்றுச் சொல்விடும் வல்லவா ராஜன்
வேகமுள்ள உயிரல்லவா யெங்கும்
நல்லாகதெரியவே சொல்லவா மூளை
நடுவினில்லொரு தீபமல்லவா

தீபத்தைக் காண்பது யெப்படி நல்ல
ஜெயமுள்ள யுபதேசம் செப்படி யிந்த
ஆபத்தின் தாபத்தை நீக்கடி ராஜன்
அவனெதுக்கப்போகத் தாக்கடி

தாக்கென்றும் சொல்லுமென்றுஜனே ஆறு
தலத்தையும் வெருத்திடும் அரசனே நயம்
நோக்கியே மேல்வாசி ஓட்டத்திலுள்ளே
நுளைந்திடயுபதேசம் சொல்வியே

யுபதேசமெண்டிடும் உள்றங்கம் மன்ம்
ஊண்டிடயெனக்கு சொல்வெளிறங்கமதை
பழகிய தீபத்தைக் கண்டுயான் கட்டை
பாழாகாமலுந்தன் கடமைதான்

கடமையேசாட்டாதே மன்னவாய் ஜெயம்
கதிருள்ளகுன்னென்று மூன்னேவா அதின்
நயமுள்ள யுபதேசமல்லவா ராஜன்
நயத்த முகியித்தீன்னல்லவா

தீனென்றுசொல்லு மென்சிந்தையே யுந்த
தீபத்துக்கிடையினில் யெல்கையே நல்ல

தானங்கள் தவராமல்சொல்வியே நான்
தயந்துபோகவே நிசம்கொள்வியே

தயந்துபோவேனென்ற தலைவரே மூன்று
தலங்களைக்கழித்தது வளவதைக்கண்டு
பயந்திடாமல் எண்ணம் நினைத்ததைப் பாரும்
பத்தியே கண்டத்தின் மேலதை

கண்டேனே தீபத்தின் பத்தியே ரண்டு
கதிர்போல் துலங்குது மத்தியில் நான்
கொண்டணைக்க தீபமுன்போகவே ரண்டும்
குருக்கமரிக்கும் விதமென்ன

குறுக்கே மறித்தபேர் மந்திரி யிரு
கூடும்புருவமதில் முகம்மதி நயம்
கடக்கவே துலங்கிடும் தீன்மதி யுள்ளால்
கதிர்போல் தெரியுதே ஹக்கதீ

ஹக்கனுக்குமுன்னால் ரண்டடித் தடுக்கும்
காரணமெனக்கதை சொல்லடி நான் முக்கியம்
முன்னேறிப்போகையில் ரண்டும்
முன்வந்துரைப்பது என்னடி

முன்வந்திலங்கு முகம்மதைக் கண்டு
மோகக்கனியென்று அகமதைத் தழுவி
ஜெம்மல் முகியித்தீன் நூனதை மேவி
தெரியவே பாரந்த தீபத்தை

தெரியமுகம்மதே பழகினேன் தந்த
தெளிந்தயுபதேசத்தை தழுவினேன் ஜெயம்
மணியென்றமீமதை நடத்தலாம் வந்து
மரித்து நீயாரென்றும் கேட்குதே

அலட்டுதுலாமென்று அஞ்சாதே தான்
அடக்கிய குன்னதை யெடுத்துரை கேட்க
முடுக்கியேயுந்தன் ஹக்குமுன் யிவன்
முஸ்தகீ மென்றது ஓதுமே

ஓதியே பின்னால் உஜூதையான் கண்டு
உகழ்ந்தயாவலைத்தீர்த்து மகிழ்ந்தேன் யான்பொல்லா
வாதினையைவிட்டு கடந்தேன்யான் யெந்த
வையக முழுதிலும் சிறந்தேன் யான்

சிறந்தயின்பம் கண்டசிங்கரே யெண்ணம்
சிந்தைகள் தவராதீர் யங்கரே யுள்ளம்

துலங்கிய ஜெகஜாலக் கண்ணடி யதை
தூண்டிக்கொள் எப்போதும் நிதசெரி

தெரிந்தமென்றெண்ணித்தான் மறகாதே மாகை
தேனிருக்க ருசிமாரிடும் உள்ளம்
குளிர்ந்துமேல் வாசியின் னுசியால் ஒட்டி
கொடுத்திடு நிதசெரி யிரையதை

---

பதம் இராகம் சங்கராபரணம் யேகதாயம்.

பல்லவி

வாடிமனங் கொண்டெழுந்தோடி
அன்னல் யலிபைக்கூடி யணைவோ விளையாடி

அநுபல்லவி.

நாடிநகரமெங்கும் நானலைந்தேன் வெகுநாள்
ஆடிமதுனல்கட்டை யவனென்றரியாமலே.

சரணங்கன்.

யெங்குமலைந்தனடி தேடி — யென்னுக்குள்வைத்து
யேங்கித்திரிந்தனடி சாடி — கண்ணுக்குள் நின்று

முன்னால் சுரூபமது ஆடி — ஜெகமுழுதும்
மோடித்திரியுதெங்கும் நாடி — அரியாமலே
எண்ணுதகோடி யெண்ணம் — யெண்ணியெண்ணி பலதை
யென்னையுற்றுணரத் தன்னையரிந்தேனடி — வாடி

நந்தவனமென்பது திரேகம் — காடிபுலி
நடுவில் நாகமிருக்கும் கோபம் — அதைபிடிக்க
மந்திரமுள்ளதொரு ஆகம் — மகுடியூதி
மாணிக்கத்தொட வெனிபாகம் — அடந்ததேகம்

சிந்தைகயங்கும்பாம்பை சிரியக்கூட்டிலடைக்க
சொந்தகுன்றையை நீக்கி சூட்டும்நானதுக்குள்ளே — வாடி

இடதின்புறத்தின் வழியாலே — அணல்ஹக்கு
இலங்குதே நானதுக்குள்ளாலே — நொக்கத்து நின்று

துலங்குதேயேகமுள்ளவாலே — பத்திபிடித்து
சுக்கூனென்ற வட்டத்திமுன்னலே — ஒஜூதைக்காண
அழகானவாலை அதுயடர்ந்த — னுணுக்குள்ளடி
பழகிடயுந்தன் கட்டை பாழாக போகாதடி — வாடி

அன்பத்தைந்து படியில்யேரி — அம்பறம்மென்ற
அடர்ந்தவாசியைப்பிடித்தேரி — மின்பெரில்சென்று

றெண்டுமெந்திரியுபகாரி அவரைமேவி
நெருங்கிமிகுருபினில் பாரீர் கண்டத்தின்மேலே

நண்டான யுச்சியின்கீழ் நடுமூளைக்குள்ளே நஞ்சு
நயந்து பாம்பைபழக்கி நஞ்சைவாண்டிகொள்ளடி

நஞ்சைவாண்டினுலென்ன பயம் நம்மள்கிட்ட
நாடியேமந்தான் வரபயம் உத்திரவன்றி
மிஞ்சி நடக்காதொருமயம் ஜெகமுழுதும்
மேல்மைக்கொண்டாடிடலாம் நயம் யேமனைக்கூட்டி

ஐந்தில் பிரிந்திலங்கும் ஆருவதுமக்காமே
நயந்துயறிந்தனையான் நந்திஈசுபறனென்றுமே வாடி

நந்திஈசுபறனென்டமெய்ராஜன் அழியாப்பொருள்
நல்லசினேகிதண்டிநேசன் அவனைசேர்ந்தால்
கந்தங்கமழும் உயிர்வாசம் பட்டமரந்தான்
காயாமல்பூத்து யெங்கும் வீசும் அதின்மணத்தை

சிந்தையில் பூட்டியதைசேர்ந்து கொள்ளாமல் வீணு
சந்தைகூட்டத்தையிதை தைரியம் கோள்ளாதடி
அத்திபழத்தை புட்டால் ரொம்ப அதிசயங்கள்
அறிந்தால்லிதுதா னென்றுமங்க தேசத்துக்கது

ஒத்தவார்த்தைகள் யல்லவெங்க முடிவேகொண்டு
உலகம்நடக்குதே செங்கோல் சறிகத்தினில்
பெற்றதாய் பிள்ளையென்று பேணும்சரிகத்திது
சித்திரம் பாப்போமென்றால் ஜெகம் விட்டு பிரிந்திடு வாடி

ஊரிலிருந்தாலொன்னைக்கொல்வார் கெட்டவனென்று
உறமுறைகள் பிரித்துதள்வார் மூதேவியென்று
சீரிவேகத்துடனே சொல்வார் லகுனத்தென்று
சிச்சியிங்காகாதென்றுவிள்வார் சரிகத்துக்கு

பாரிலிருந்தால் வாயால் பகறுதேதெரிந்திட
கூடுமெய்யுலகத்தில் கோர்க்கை முஹம்மது முகியித்தீன் வாடி

பதம் இராகம் ஹமாசி ரூபகதாளம்.

பல்லவி

தனைத்தானே பாரு—முன்னால்
தான்வந்தொஜூது நின்றுடிடும் நேரு

அநுபல்லவி

அன்னைதந்தையிழந்து யடந்தவனத்தில் சென்று
எண்ணுதஎண்ணங்கோடி எண்ணிமெலியவேண்டாம்

வான்ம்புவி ஜெகமும் யுந்தன்
வளர்ந்தயுடலுக்குள்ளிருக்குதே பாரு

போணும் சுவர்க்க நரகம் கட்டை
பொங்தியிக்குள்ளங்கே யிருக்குதேபாரு

தோணுதருசுகுருசு யுந்தன்
துதிப்புக்கு யருகிலிருக்குதே பாரு

காணுதமெலவுகலம் மூளை
கவுழ்த்தியேயோட்டில் யதுக்குள்ளேபாரு

தேடியேயொன்பதும் யுன் திரேகத்துக்குள்ளேவைத்து
சாடிவனத்தில் சென்றதாவம் யெனக்குச்சொல்லு தன்னை

ஒன்பதுவிதமுமம்மள் யுடலுக்குள்
ஊண்டியிருக்கும் வேலையரியாயோ

அம்பரமென்றவட்டம் யுடலுக்குள்
ஆராய்ந்து பார்த்தால் தெரியாதோ

மின்பர் றெண்டத்துக்கு வாசி
மேலோட்டத்தினுல் துறக்காதோ

சம்பராயம் நிரைந்த உயிரை
சாஷ்டாங்கஞ்செய்தால் பேசாதோ

அம்பரம்தனிலேரி ஆடி கரணம்மிட்டு
மின்பரில்வந்துகையை நீட்டுங்கதையரியாய் தன்னை

வித்துசிறுசுதானே மரம்
விருட்சத்தைப்பார்த்து நீ மலையாதே

கத்தி கத்தி புலம்பி மரம்
கனத்தபெருசென்று யெண்ணுதே

யெத்தனை யோகாலம் மரம்
யிருக்குமென்றெண்ணி நிசங்கொள்ளாதே

பத்திபிடித்தபூமி வேரை
பாழாக்கினுல்மரம் நில்லாதே

வெத்திபொருந்தி யெங்கும் வேடிக்கை காட்டுவித்து
யிப்படிவித்துக்குள்ளே யெப்படியாச்சுதென்று தன்னை

வித்துக்கு நுதைமேலே றெண்டும்
விரும்பிடும் ஒருசட்டை சவ்வாலே

கொட்டையதுக்குமேலே தூரு
கொடியுடனேமரம் யதுமேலே

பச்சையிலைமேலே பூவு
வாசம் சிறந்திடும் அதுமேலே
உச்சிதகாயாலே பச்சை
உருவம் சிவந்துதே பழம்போலே.
வித்துக்குளித்தினையும் விளைந்ததெப்படி யென்று
மத்தியேபாராமலே சுத்தியலையவேண்டாம் தன்னை
பழமென்பது தோலு காய்
பழுக்காமலிருக்கும் சதைதானே
பூவென்பது ரெத்தம் யிலை
போலத்தெரிந்தது கொழுப்புதானே
மனமென்பது முள்ளு கொட்டை
மரத்துசவ்வு தொலிதானே
கொடியென்பது நரம்பு நுரை
கூரிடும்மூளைக் கட்டிதானே.
கட்டியேமூளையிக்குள் கனகவித்து மணியே
எட்டையும் நீக்கிச்சென்று யெட்டிபாராமல்வீணு தன்னை
வித்தைகிளைவைத்தால் பழம்
வேகமாயுயர வருவதென்ன
பத்திபிடித்த வேரு மரம்
பாளான வீதிக்கீழ் யொன்றுமில்லை
மத்தியென்றகண்டம் மேலே
மரத்துக்குப்பழம்வந்து உதித்ததுபோல்
ரெத்தினதீபமொன்று ரெண்டு
நிரைந்தமீம்லாமது குள்ளாலே
பத்தியுடனேமீமே பழகிலாமீமுக்குள் சென்று
யெத்திகொள்ளாமல் வீணுகத்திபுலம் வேண்டாம் தன்னை
லாமுக்குள் நூணுகி நடுவில்
நல்லநோக்து அதுஹக்காகி
யேவல்செய்யுமே மீமே ஹக்கு
யிம்பமுடனே பார்த்துமதப்பாகி
ஆவல்சிறந்துமேவி யெந்தன்
அங்கம்யென்று சொல்லி அதில்தாவி
வேகமுடனேமோக கலையால்
விசிரியமீமதைத்தான்மூடி
ஆகமுடனேயெட்டுவாசல் அடைத்தகட்டை
போகும்நாசியின்குள்ளேபூட்டுமேல்வாசியோட்டம் தன்னை

தீன்னென்றயதிகாரம் அலிபுமீம்
சேர்ந்தாலும் பார்க்காதேயதுகோபம்
நானென்றயதிகாரம் ஹக்கை
நங்கிடசெய்யுமே அதுவேகம்
மீமென்றமாதாவே பாராமல்
மீரியேபேசுமே யதுசாபம்
தானென்ற சகலத்துக்கும் யதிகாரம்
தயிரியம்பேசுமே யதுயோகம்
தீனென்றநிலையதை திரப்படுத்தியே கொண்டால்
கோனுனுடனேநம்மள் குடியிருப்பதுநிச்சயம் தன்னை
கோனுனே மேவிக்கொண்டால் குட்டி
ஆடெல்லாமேய்த்து ஓட்டலாமே
தானென்ற வாசியோட்டம் பிடித்தால்
கைதடியென்று ஊன்றி நடக்கலாமே
வானம்நிறைந்தபூமி யெங்கும்
வையாளிபோடெங்கும் வோடலாமே
ஆணென்றும் பெண்ணென்றும் மதியாத
ஆதியுடனே சேர்ந்திருக்கலாமே
யெமனென்றவன்பேரி லேறியுட்கார்ந்து
சீமைமுழுதும்போய் சிறந்தவேடிக்கைப்பார்ப்போம் தன்னை
யெமனென்றது வாசி குதிரை
யேரியே வேடிக்கைப்பாராமல்
சீமைத்தானுகழ்ந்தால் யெந்த
தேசமெல்லாம் போகமுடியாதோ
காமனேயரியாவிட்டால் பட்ட
கட்டைதழைக்கும் மென்றுயெண்ணுதை
ஊமைமனிதனுடனே சேர்ந்து
உறவாடாமல் யொன்றுமுடியாதே
யேமன்ஊமையென்னும் யிபுலீசுமூத்தவனும்
நூனென்றதீனதுக்கு ஒன்றும்பதில்சொல்லாது தன்னை
தன்னுக்குள் தானுகழ்ந்து பின்னல்
தலைமகன் மகளை பிரித்தானே
அன்னைபிதாவென்று றெண்டுக்கும்
ஆஷுக்கு மகஷுக்கு கொடுத்தானே
ஒன்ருகசேர்ந்தவுடன் கண்ணில்
உகழ்ந்ததீன்மணி வந்துதித்தாரே
நன்ருனபேரிரண்டு அலிபுமீம்
நாமமுகியித்தீ னென்றனைத்தாரே

முச்சுடரில்பிரிந்த முகியித்தீன் யென்றநூனில்
இச்சையைவைத்துயுகழ்ந்துயிலங்கு நொக்கத்துமானுதன்னை
நொக்கத்தானதும் நூணு யெங்கும்
ஒடியேவட்டம் சுக்கூன்னாகி
ஹக்கதுகுள்ளாக நூன்
கனத்த முகியித்தீன் வளவாக
யெக்காலமும் நூணில் கொக்கத்து
யிருந்துகொண்டியதில் விளையாட
பக்குவபருவமதில் றெண்டும்
பாய்ந்து யொன்றோடொன் றலைமோத
முக்கியமாகிய நூன் முடுகுதே வேகம்ரொம்ப
நொக்கத்தாகியஹக்கு னொதுங்குதேபயந்தோடி தன்னை
பயந்தவுடனே நொக்கத்து உருக்கி
பார்த்திடும் பருவமுள்ளரசு
அடந்தவேகம்மீறி நொக்கத்து
அஞ்சிப்பயந்து நின்றாடிடுமே
கெஞ்சியே தயங்கிடுமே கொக்கத்து
நீர்கேட்டதெல்லாம் தந்தேனென்றிடுமே
யெண்சானுடலுக்கும் நீர் ராஜா
யெனக்கும் யெஜமான்தான் னென்றிடுமே
தன்னையறிந்திடவே தவுகீதிதுவிபரம்
மண்ணில்மடிந்தபேரை மறுபிறப்பாக வேண்டாம் தன்னை
குட்டியசிவத்தில் முட்ட வெள்ளெழுத்து
கூரிடும்வார்த்தை யேர்ந்திடுமோ
சட்டிக்கி தூறில்லாமல் தண்ணீர்
தாவினால்தங்கி நின்றிடுமோ
பட்டமரத்திலேரி பழம்
பரிப்பமென்றால் அங்கே அகப்படுமோ
கட்டியேவாசியெல்லாம் குரைத்தால்
கட்டைநிலைத்து யிருந்திடுமோ
இப்படிலேசாக யெல்லாம் பிரிந்ததென்று
செப்பும் முகம்மது முகியித்தீன் ஜெகத்திளரியநாடி தன்னை

ஆசிரிய விருத்தம்

முன்னானில் அவ்வல்தனில் யாருமற்று
மோகமது தன்னாலே வேகமீரி
தன்னுக்குள் பிரிந்திலங்கும் ஒளிவைக்கொண்டு
தான்வாசம் சாற்றமயில் வேஷம்சூட்டி

அண்ணலென்று ஆடுமயில் அழகைக்கண்டு
ஆனந்தம் மகுருக்கு விம்மவிம்ம
தன்னரியாய் மூன்றுமுத்து பிரிந்திலங்க
தாவிடமே மயில்வேகம் நாடுமப்போ

வேகமது ஆட்டமுள்ள மயிலேநோக்கி
விரும்பிடாதீர் மூன்றையுந்தான் ஒன்றைநீக்கி
தாவந்தீரறெண்டையுந்தான் ஆவல்கொண்டு
தான்ஆட்டம் தீரயுந்தன் மையல்தீரும்

கோபமுள்ளதோர்மணிதான் வேகம்ரெம்ப
கூடிவந்தயிறுமணியுக் குள்ளவைத்து
ஆவல்தீர யிருவரும் நாம்தரித்திருக்கும்
ஆசனத்தை கட்டியதில் நேசம் கொள்வோம்.

---

வித்துக்குயிரிருக்கும் விடங்தெரியாமலெங்கும்
கத்திக்கத்திப்புலம்பிக் காரியமென்ன மத்தியபார்
சுத்திசுத்தியெங்கும் சூழ்ந்துவது வந்தாலும்
பத்தம்வைத்து நல்லுயிரைப்பார்

பாரடாவட்டமதில் மகபத்தியாதெரியும்
நேருடனே யொன்றாக்கி நேசம்வை வாசிபூட்டி
ஆருச்சியின்மணிய ஆசையுடனேபூட்டி
பாரடா கண்டத்தின்மேல் பழம்

எண்சானுடலெம்பார் யேகுவாறுடல்முழுதும்
பஞ்சாசரபொருளை பாகுவார் கெஞ்சிக்கெஞ்சி
நஞ்சிருக்குமோரெழுத்து நல்லகண்டத்தின்மேல்
அஞ்சியநெஞ்சியதையணை

கண்டமதுமேலே கனத்தசிறப்பனந்தம்
ஒண்டிலும்மடங்காது ஒருசோதி—நின்றிலங்கும்
கொண்டாடி நாம்பழக்கிக்கூர்மையுடனே யரிந்தால்
நன்றாகவே யிருப்போம்நாம்

கூடழியமாட்டாது கோடிகோடி காலமெல்லாம்
நாடுமந்த யுயிரதுவை நம்பினல்—ஆடிடுமே
கொட்டியதான்பாட குதித்துக்குதித்துவுன்னை
கட்டியபிடிக்கு மந்தஹக்கு

அரசனைக்காணயவன்வீடு தெரியாமல்
புருஷனில்லாகைம்பெண்ணட்டிபோல் புலம்பி—வருசையென்ன
கண்டமென்றுசொல்லு மிருகண் புருவத்திமேலே
நன்டான உச்சியின்கீழ் நாதன்

நாதனேகண்டு நலமுடனே பேசுமப்போ
யேதுகுறையுண்டுமோ யாதுமில்லை—நீதகுரு
அலிபுடனேலாம்போய் யணைந்த கதையதுபோல்
தெளிவான நாதனுடன் சேரு

சேர்ந்தாலும் சிக்குமடா செம்பவளமானமுத்து
சார்ந்தாலும் சாருமடா தன்னுடனே—கார்ந்தமது
மேய்ந்தாலும் கால்கயத்தை மெள்ளபிடித்திருந்தால்
பாய்ந்து ஓடிப்போகா தந்தப்புரு

எங்கிலும்போய் யிரையெடுத்துக்கொண்டாலும்
ஓன்கூட்டில் தான்வந்து வுரையுமது—மங்களமா
கால்கயருந்தான் பிடித்து கனத்தகூடும் வைத்திருக்க
யேக்கிதென்றுயெண்ணி நீ யிழக்காதே

இழக்காதே நற்கயத்தை யெங்கேபறந்தாலும்
துறக்காதேயுன் கைகை ஒடிவிடும் மறக்கவேண்டாம்
ஊசியென்ற வாசியதில் நல்லகண்டத்தின் மேல்
ஊசிபுகுதாத கோட்டைக்குள்

கோட்டையிக்குள்சென்று கோடையிடிபோலதற
நாட்டமுந்தன் எண்ணமதை நல்உயிரில் நோட்டமிட்டு
ஆட்டியசைத்து யென்னையகந்தறத்தில் மேயவிட்டாய்
பூட்டினேன் யுன்னையான் புகழ்ந்து.

---

பதம் இராகம் டோமரி தோடி.

பல்லவி

என்செய்வேன் ஞானே யிறசூலைக்காணேன்
எப்போ யெனக்கு ஜெயம் தருவாரோ தேனே

அநுபல்லவி.

மஞ்சுபூமேடை மாமதினுவாழ்
மகாராஜர் போற்றும் தீனரசாள்வார்
ஐந்துமோராறும் யறிந்தால் தீனுவார்
அகமது நபியிரு பாதம் பெருவாய் என்

ஆதியினதி சோதியுருவாய்
அல்ஹம்துயென்னும் அலிபில் ஒளிவாய்
நீதியாக்குன்னென்ற நானுக்குள் தெளிவாய்
நிரைந்தயாஸீமே தங்கள் நேசமே தருவாய் என்

கண்ணடிவட்ட கமலத்தினுள்ளே
கருவுருவான தெளிவதுக்குள்ளே
பெண்ணுணுமில்லா யிருவிதுக்குள்ளே
பிரிந்த முகம்மதிருபுகழ்ந்திருமானே என்

முக்கோணமென்ற முடலுக்குள்ளோசை
முழங்குதே ஹாபென்ற கோணத்திலாசை
ஹக்கதுஊமை யெழுத்துவாசி
கயத்தைப்பிடித்து யேறி நாசியில் நேசி என்

அல்லம் குல்லியென்ற ஆதியிரு மந்திரி
அடந்த வலதுபுரம் முகம்மது மந்திரி
சொல்லவலுவோ யிடது புறத்தின்
சொல்லும்கவிபயின்றேன் முகம்மது முகியித்தீன்:

---

பதம் இராகம் தாரா ஏகதாளம்

பல்லவி

தாதா யெந்தனையாளும் நீதா
யிருபாதாரந்தாரும் மகுமூதா

அநுபல்லவி

ஜெயபோதா புருக்கான் மறைவேதா
ஜெகம்புகழ் பெற்றிலங்கும் குருநாதா
காதம் கமழும்கதம் தாதா
கஸ்தூரி புயனேசரே நீதா தாதா

அவ்வலலிபிர் பிரிந்தோரே
ஜெகவண்ட பிண்டமும் நிரைந்தோரெ
நவ்வுமப்துல்லா நுதல் நீரே
நவறெத்தின மீமாநிண்டமேரே தாதா

வானில் மதியழைத்த வாசா
கபீப்வறுமைக்கு பிரறுத்த சுயராஜா
தானவன் புகழ்ஜெய நேசா
எந்தன் சஞ்சலந்தீரும் மகராஜா தாதா

கானில்மான் முசல்சர்ப்பம் மொழிந்த
ஹக்கன் கபீபென்று யிருதயமகிழ்ந்த
வானவாபுடைசூழ நிறைந்த
ஜெயவள்ளலை நம்பினேன் யான்மகிழ்ந்த தாதா

ஹாஸின் குலத்திற் கதிர்வீசும்
இன்ஸான் கவுமுகளை கரைசேர்க்கும் வாசம்
தாசன் முகம்மது முகியித்தீன் நேசன்
சிந்தைதயவுவைத் தெனையாளும் யாஸீன் தாதா

முற்றிற்று

---

IBRAHEEM PRESS, HIGH ROAD, TRIPLICANE.

படிக்க படிக்க இனிக்கும் நினைக்க நினைக்க பூரிக்கும்

# ரஹஸ்யசாஸ்திர
## சிந்தாமணி

(மணவாழ்க்கையின் இரகசியங்கள்)

இதில் ஸ்திரீ புருஷர் மணந்து வாழ்வதன் இரகசியங்கள், நான்கு ஜாதி ஸ்திரீ புருஷர்களின் குணலக்ஷணங்கள், பெண்களுக்கு இருக்கவேண்டிய லக்ஷணங்கள், விவாகம் செய்வதற்குத் தகுதியான பெண்களின் குணலக்ஷணங்கள், சம்போகத்தின் பிரயோஜனங்கள், ஸ்திரீ புருஷர்கள் கலந்து உறவாடுகிற கிரமம், போகத்திற்குரிய வயதும் கால அளவும், காமத்தின் விபரம், இன்ன மாதர்களிடம் சம்போகம் கூடாதென்பது, சம்போகம் செய்யத்தகாத வேளையும் விதமும், மிதமிஞ்சின சம்போகத்தால் வரும் கெடுதிகள், கருத்தரிக்கும் விபரம், ஆண் பெண், இரட்டை பிள்ளை தரிக்கும் விபரம், கர்ப்பவதிகள் கவனிக்கவேண்டிய விஷயங்கள், லேகியம், பஸ்பம், மாத்திரை, திலா முதலியவைகள் செய்யும் முறைகள், இன்னும் அநேக அரிய விஷயங்களும் யாவருக்கும் விளங்கும்படியாக இனிய செந்தமிழில் உயர்ந்த கிளேஸ் காயிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது:

விலை அணா 8.

பெற்றுக்கொள்ளுமிடம்:—

எம். ஏ. அப்துல் அஸீஸ், அப்துல் குத்தூஸ்,

கரீமி பிரஸ்,

நே. 709, ஹைரோட், திருவல்லிக்கேணி.

ப தரூஸ்.

இப்ராஹீம் பிரஸ், ஹைரோட், திருவல்லிக்கேணி